
திருப்புகழமிர்தம்



ஆசிரியர்

கிருபானந்தவாரி

பரிதாபி தை

உ

முருகா

அன்பர்களுக்கு

எந்தை கந்தவேள் திருவருள் துணைகொண்டு பல இடர்ப்பாடுகளுக்கிடையே சென்ற 37 ஆண்டு களாக நமது திருப்புகழமிர்த வெளியீட்டை ஒரு வாறு வெளியிட்டு வந்தோம். மேற்கொண்டு இதை வெளியிட முடியாத சூழ்நிலைகள் ஏற் பட்டுள்ளதால் நமது திருப்புகழமிர்தம் இந்த இத ழோடு நிறைவுபெறுகின்றது. ஆகவே அன்பர் கள் மேற்கொண்டு சந்தாத் தொகைகளை அனுப்பி வைக்க வேண்டுவதில்லை.

சிதம்பரத் தலத்துக்குரிய எஞ்சிய பாடல் களுக்கு உரை விரைவில் எழுதப்பட்டுப் புத்தக வடிவில் வெளிவரும்.

சென்ற பல ஆண்டுகளில் திருப்புகழமிர்த வெளியீட்டுக்குப் பலவிதத்திலும் உதவி புரிந்து வந்த அன்பர்கள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கின்றேன்.

அன்பன்,

கிருபானந்தவாரி

உ

முருகா



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 37	பரிதாபிஹு—தைமீ ஜனவரி, 1973	இதழ் 4

திருப்புகழ்

சிதம்பரம்

திருடிக ளிணக்கிச் சம்ப ளம்பறி
நடுவிகள் மயக்கிச் சங்க முண்கிகள்
சிதடிகள் முலைக்கச் சும்பல் கண்டிகள் சதிகாரர்
செவிடிகள் மதப்பட் டுங்கு குண்டிகள்
அசடிகள் பிணக்கிட் டும்பு றம்பிகள்
செழுமிக ளழைத்திச் சங்கொ ளுஞ்செயர்
வெகுமோகக்

குருடிகள் நகைத்திட் டம்பு லம்புக
ளுதடிகள் கணக்கிட் டும்பி ணங்கிகள்
குசலிகள் மருத்திட் டுங்கொ டுங்குணர் விழியாலே
கொளுவிகள் மினுக்குச் சங்கி ரங்கிகள்
நடனமு நடித்திட் டொங்கு சண்டிகள்
குணமதில் முழுச்சுத் தசங்க்ய சங்கிக ளுறவாமோ

இருடிய ரினத்துற் றும்ப தங்கொளு
மறையவ னிலத்தொக் குஞ்சு கம்பெறு
மிமையவ ரினக்கட் டுங்கு லைந்திட வருசூரர்

1828—1

இபமொடு வெதித்தச் சிங்க மும்பல
இரதமொ டெதத்திக் கும்பி ளந்திட
இவுளியி ரதத்துற் றங்க மங்கிட விடும்வேலா
அரிகரி யுரித்திட் டங்க சன்புர
மெரிதர நகைத்துப் பங்க யன்சிர
மளவொடு மறுத்துப் பண்ட ணிந்தவ ரருள்கோனே
அமரர்த மகட்கிட் டம்பு ரிந்துநல்
குறவர்த மகட்பக் கஞ்சி றந்துற
அழகிய திருச்சிற் றம்ப லம்புகு பெருமாளே.

பதவுரை

இருடியர் இன துற்றும்=முனிவர்களின் இனத்தோர் கூட்டமும், பதம் கொளும்=பதவியில் இருக்கும், மறையவன் நில தொக்கும்—பிரமன் படைத்த மண்ணுலகோர் கூட்டமும், சுகம் பெறும் இமையவர் இன கட்டும்=சுகம் பெற்று இருந்த தேவர்களின் கூட்ட மிகுதியும், குலைந்திட வரு சூரர்=எல்லாம் நிலைகுலைய வந்த சூரர்கள், இபமொடு வெதித்த=யானைக் கூட்டங்களுடன் பகை கொள்ளும்; சிங்கமும்=சிங்கங்களும், பல இரதமொடு=சிங்கங்கள் பூட்டிய பல தேர்களும், எத திக்கும் பிளந்திட=எந்தத் திசைகளிலும் பிளவுபட்டு அழியவும், இரதத்து உற்ற இவுளி அங்கம் மங்கிட=தேரில் பூட்டப்பட்ட குதிரைகளின் உடல் நாசம் அடைந்து அழியவும், விடும் வேலா=செலுத்திய வேலாயுதரே! அரி=நரசிங்கத்தையும், கரி உரித்திட்டு=யானையையும் தோல் உரித்து, அங்கசன்=மன்மதனும், புரம்=திரிபுரமும், எரி தர நகைத்து=எரிபட்டு அழியச் சிரித்து, பங்கயன் சிரம் அளவொடும் அறுத்து=பிரமனுடைய தலையை ஒரு கணக்காக அறுத்தும், பண்டு அணிந்தவர்=முன்பு அத்தலையை அணிந்தவருமான சிவபெருமான், அருள் கோனே=தந்தருளிய தலைவரே! அமரர் தம் மகட்கு=தேவருடைய புதல்வியாம் தேவசேனையிடம், இட்டம் புரிந்து=விருப்பத்தைச் செய்து, நல் குறவர் தம் மகள்=நல்ல குறவர் புதல்வியாகிய வள்ளிநாயகி, பக்கம் சிறந்து உற=வலப் பக்கத்தில் சிறப்பாக வீற்றிருக்க, அழகிய திருச்சிற்றம்பலம் புகு=அழகிய திருச்சிற்றம்பலத்திலே புக்கு விளங்கும், பெருமாளே=பெருமையிற் சிறந்தவரே! திருடிகள்=களவு செய்பவர்கள், இணக்கி சம்பளம் பறி=(வந்தவர்களைத் தம் விருப்பப்படி) இணங்க வைத்து பொருள் பறிக்கின்ற, நடுவிகள்=யார் பக்கமும் சேராது நடுநிலை பூண்டவர்கள், சங்கம் உண்கிகள்=சையோகம் காண்பவர்கள்; சிதடிகள்=அறிவிலிகள், கச்சு முலை உம்பல்=இரவிக்கை யணிந்த

தனங்களாகிய யானையை யுடையவர்கள், கண்டிகள்=கடிந்து கூறும் பேச்சு உடையவர்கள், சதிகாரர்=வஞ்சனை நிறைந்தவர்கள், செவிடிகள்=காது கேளாதது போல் இருப்பவர்கள், மதம் பட்டு உங்கு=அகங்காரம் கொண்டு ஊங்காரஞ் செய்து அதட்டும், குண்டிகள்=கீழ் மக்கள், அசடிகள்=அறிவிலிகள், பிணக்கிட்டும் புறம்பிகள்=ஊடல் கொள்ளும் குலவொழுக்கத்துக்குப் புறம்பானவர்கள், அழைத்து இச்சம் கொளும் செயர்=வருபவர்களை அழைத்து இச்சையை நிறைவேற்றி வெற்றி கொள்பவர்கள், வெகு மோக—மிக்க ஆசை பூண்ட, குருடிகள்=அறிவுக்கண் இல்லாதவர்கள், நகைத்து இட்டம் புலம்பு=சிரித்துக் கொண்டே தமது விருப்பத்தை அடிக்கடி முறையிடுகின்ற, கள் உதடிகள்=கள்ளுண்ட உதட்டினர்கள், கணக்கு இட்டும் பிணங்கிகள்=பெற்ற பொருளை கணக்குப் பார்த்துப் பார்த்துப் பிணக்கம் கொள்பவர்கள், குசலிகள்=தந்திரவாதிகள், மருத்து இட்டும் கொடும் குணர்=மருந்து வைத்து மயக்கும் கொடிய குணத்தினர், விழியாலே கொளுவிகள்=கண் பார்வையைக் கொண்டே தம்பால் இழுத்துக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள், மினுக்கு சங்கு இரங்கிகள்=மினுக்கப்பட்ட சங்கு வளையல்கள் ஒலித்தலையுடையவர்கள், நடனமும் நடித்து ஒங்கு சண்டிகள்=நடனமும் நடித்து ஒங்குகின்ற பிடிவாதக்காரிகள், குணமதில் முழு சுத்த அசங்க்ய சங்கிகள்=குணமோ முழுவதும் சுத்த அசிங்கமான சம்பந்தமுடையவர்களான பொது மாதர்களின், உறவு ஆமோ=உறவு ஆகுமோ? ஆகாது.

பொழிப்புரை

முனிவர்களின் கூட்டமும், பதவியிலிருக்கும் பிரமன் படைத்த பூவுலகத்தோரின் கூட்டமும், சுகம் பெற்றிருந்த தேவர்களின் கூட்டமும் நிலைகுலைய வந்த சூரர்களும், யானையுடன் பகைக்கின்ற சிங்கங்களும், சிங்கம் பூட்டிய தேர்களும் எந்தத் திசையிலும் பிளவுபட்டு அழியவும் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் உடல் அழியுமாறும், செலுத்திய வேலாயுதரே!

நரசிங்கத்தையும் யானையையும் தோலை உரித்தவரும், மன்மதனும் திரிபுரமும் அனல்பட்டு எரியச் சிரித்தவரும், பிரமன் தலையை அளவுடன் கொய்தவரும், அத்தலையை யணிந்தவருமாகிய சிவமூர்த்தி பெற்ற தலைவரே!

தேவர்களின் புதல்வியாகிய தேவசேனைபால் அன்பு பூண்டு, நல்ல குறமகளாம் வள்ளி வலப்புறத்தில் சிறப்புற்று வீற்றிருக்க அழகிய திருச்சிற்றம்பலத்தில் புக்கு விளங்கும்

பெருமிதமுடையவரே! திருடிகள், ஆடவரைத் தம் விருப்பத்துக்கு இணங்கவைத்துப் பொருள் பறிப்பவர்கள்; யாரிடத்தும் சமமாக நடப்பவர்கள்; ஆடவரை மயங்கவைத்துச் சேர்ப்பவர்கள்; அறிவிலிகள்; கச்சு அணிந்த யானைபோன்ற கொங்கைகளை யுடையவர்கள்; கடிந்து பேசுபவர்கள்; வஞ்சகிகள்; காது கேளாததுபோல் இருப்பவர்கள்; அகங்காரத்தால் ஊங்காரஞ் செய்து பேசும் கீழ்மக்கள்; அறிவற்றவர்கள்; ஊடல் கொள்ளும் அறநெறிக்குப் புறம்பானவர்கள்; வளமையானவர்கள்; ஆண்களை யழைத்து இச்சைகொண்டு வெற்றிபெறுபவர்கள்; மிகுந்த ஆசைபூண்ட அறிவுக் கண்ணில்லாதவர்கள்; சிரித்துக் கொண்டே தமது விருப்பத்தை அடிக்கடி முறையிடுபவர்கள்; கள்ளுண்ட உதட்டையுடையவர்கள்; வந்த பணத்தை எண்ணிப் பிணங்குபவர்கள்; தந்திரவாதிகள்; மருந்துவைக்குங் கொடிய குணத்தவர்கள்; கண்பார்வையாலேயே வசப்படுத்துபவர்கள்; துலக்கிய சங்கு வளையலின் ஒலியுடையவர்கள்; நடனமாடி ஓங்குகின்ற பிடிவாதக்காரிகள்; குணம் ஒருசிறிதும் இல்லாத அசிங்கமுடையவர்கள் ஆகிய விலைமாதர்களின் உறவு ஆகுமோ? ஆகாது.

விரிவுரை

இத்திருப்புகழில் முதல் நான்கு அடிகளும் பொதுமாதர்களின் இழிவை இயம்புகின்றன.

நடுவிகள்:—

எவ்வளவு பணந்தரினும், கீழ்மக்களிடத்தும் சமமாக நடப்பவர்கள்.

நடுவன்—இயமன். இதற்குப் பெண்பாலாகக் கொண்டு இயமனைப் போன்றவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

குண்டிகள்:—

குண்டர்கள் என்பதன் பெண்பாற் பெயர்.

இருடியர்............குலைந்திட வருசூரர்:—

முனிவர்களும் மண்ணகத்தோரும், விண்ணகத்தோரும் நிலைகுலையுமாறு சூராதியவுணர்கள் கொடுமை புரிந்து வந்தார்கள்.

அரி:—

இது நரசிம்மத்தைக் குறிக்கும். சிவபெருமான் நரசிங்கத்தின் தோலை உரித்துத் தரித்தருளினார்.

அங்கசன்புரம் எரிதர நகைத்து:—

மன்மதனும் திரிபுரமும் எரியுமாறு சிரித்தவர்.

புரம்—உடம்பு. மன்மதனுடைய உடல் எரியுமாறு என்றும் பொருள் கொள்ளலாம்.

பங்கயன் சிரமளவொடு மறுத்துப் பண்டணிந்தவர்:—

நான் படைப்பவன் என்று பிரமன் தருக்குற்ருன். சிவமூர்த்தி அவனுடைய தலையை நகத்தால் கிள்ளியருளினுர்.

> நல்ல மலரின்மேல் நான்முகனுர் தலை
> ஒல்லையரிந்த தென்றுந் தீபற
> உகிராலரிந்த தென்றுந் தீபற —திருவாசகம்

அவ்வாறு அரிந்த பிரமன் தலையை தரித்துக் கொண்டார்.

> தலையே நீ வணங்காய்;
> தலைமாலை தலைக்கணிந்து
> தலையாலே பலிதேருந் தலைவனை
> தலையே நீ வணங்காய் —அப்பர்

அமரர்தமகட்கு —

தேவகுமாரியாகிய தேவயானையிடம் அன்பு பூண்டும், வள்ளியை வலப்புறத்தே சிறப்பாக இருக்குமாறும் அருளிச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கின்ருர் முருகவேள்.

கருத்துரை

திருச்சிற்றம்பல மேவிய தேவா! மாதராசை தீர்த்தருள்.

திருப்புகழ்

கொந்த ரங்குழ லிந்து வண்புரு
வங்கள் கண்கய லுஞ்ச ரங்கணை
கொண்ட ரம்பைய ரந்த முஞ்சசி துண்டமாதர்
கொந்த ளங்கதி ரின்கு லங்களி
னுஞ்சு ழன்றிர சம்ப லங்கனி
கொண்ட நண்பித ழின்சு கங்குயி லின்சொல்மேவுந்
தந்த வந்தர ளஞ்சி றந்தெழு
கந்த ரங்கமு கென்ப பைங்கழை
தண்பு யந்தளி ரின்கு டங்கைய ரம்பொனுரந்

தந்தி யின்குவ டின்த னங்களி
ரண்டை யுங்குலை கொண்டு விண்டவர்
தங்க டம்படி யுங்க வண்டிய சிந்தையாமோ

மந்த ரங்கட லுஞ்சு ழன்றமிர்
தங்க டைந்தவ னஞ்சு மங்குலி
மந்தி ரஞ்செல்வ முஞ்சு கம்பெற எந்தவாழ்வும்
வந்த ரம்பையெ னும்ப கிர்ந்துந
டங்கொ ளுந்திரு மங்கை பங்கினன்
வண்டர்லங்கையு ளன்சிரம்பொடி கண்டமாயோன்

உந்தி யின்புவ னங்க ளெங்கும
டங்க வுண்டகு டங்கை யன்புக
ழொண்பு ரம்பொடி கண்ட எந்தையர் பங்கின்மேவும்
உம்ப லின்கலை மங்கை சங்கரி
மைந்த னென்றய னும்பு கழ்ந்திட
வொண்ப ரந்திரு வம்ப லந்திகழ் தம்பிரானே.

பதவுரை

மந்தரம் கடலும் சுழன்று=மந்தர மலையைக் கடலில் சுழல வைத்து, அமிர்தம் கடைந்தவன்=அமுதத்தைக் கடைந்து எடுத்தவரும், அஞ்சும் மங்குலி=அச்சங் கொண்ட இந்திரனுடைய, மந்திரம்= இருப்பிடமானது, செல்வமும்=செல்வமும், சுகம் எந்த வாழ்வும் பெற=சுகம் முதலிய சகல வாழ்வையும் பெறுமாறு, வந்த ரம்பை எனும் பகிர்ந்து=கடலில் தோன்றி அரம்பை யாதிய நடன மாதர்களையும் சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, காமதேனு, உச்சைச் சிரவம், முதலிய எண்ணத்தக்க பொருள்களை பங்கிட்டு வழங்கி, நடம் கொளும் திருமங்கை பங்கினன்=நடனங் கொண்ட இலட்சுமி நாயகரும், வண்டர்=மங்கல பாடகருடன் கூடிய, லங்கை உளன்=இலங்கையில் வாழ்ந்த இராவணனுடைய, சிரம் பொடி கண்ட மாயோன்=தலைகள் பொடியாகும்படி வென்ற மாயவரும், உந்தியின்=தமது வயிற்றில், புவனங்கள் எங்கும் அடங்க உண்ட=அண்டங்கள் எல்லாவற்றையும் அடங்க வுண்ட, குடங்கையன்=உள்ளங் கையரும் ஆகிய திருமால், புகழ்=புகழ, ஒண் புரம் பொடி கண்ட எந்தையர்=ஒளிமிகுந்த திரிபுரங்களை எரித்துப் பொடி செய்த எந்தையாகிய சிவபெருமானுடைய, பங்கில் மேவும்= பாகத்தில் இருக்கும், உம்பலின் கலைமங்கை=எழுச்சி கொண்ட சகல கலைகளுக்குந் தலைவியாகிய வாகீசுவரியாம், சங்கரி மைந்தன் என்று=

பார்வதியின் திருமைந்த! என்று, அயனும் புகழ்ந்திட=பிரமதேவனும் புகழ, ஒண் பரம்=ஒளியும் மேன்மையும் உடைய, திருவம்பலம் திகழ்=திருவம்பலத்தில் விளங்கும், தம்பிரானே=தனிப்பெருந் தலைவரே! அம் குழல் கொந்தர்=அழகிய கூந்தலிலே பூங்கொத்துக்களையுடையவர், இந்து வண் புருவங்கள்=பிறைச்சந்திரனைப் போன்ற வளப்பமுள்ள புருவங்களையும், கயலும் சரம் கணை கண் கொண்ட=கயல் மீன் போலவும் அம்பு போலவும் அம்பின் அலகு போலவும் உள்ள கண்களைக் கொண்ட, ரம்பையர் அந்தமும்=அரம்பையரது அழகையும், சசி துண்ட மாதர்=சந்திரனைப் போன்ற முகத்தையும் உடையவராகிய மாதர்கள், கொந்தளம் கதிரின் குலங்களினும் சுழன்று=கூந்தலின் ஒளி அழகுகளில் ஈடுபட்டுத் திரிந்து, இரசம் பலம் கனி கொண்ட நண்பு இதழின்=சுவையுள்ள பழத்தின் சாரத்தைக் கொண்டு உகந்ததாயிருந்த வாயூறலின், சுகம்=கிளி, குயில்=குயில் என்பவைகளின் மொழி போன்ற, இன் சொல் மேவும்=இனிய சொல் விரும்பும்படியான, அம் தரளம் தந்த=அழகிய முத்துக்கள் போன்ற பற்கள், சிறந்து எழு கமுகு என்ப கந்தரம்=நல்ல எழுச்சியுள்ள கமுகு போன்ற கழுத்து, பை கழை தண் புயம்=பசிய மூங்கில் போன்ற குளிர்ந்த புயங்கள், தளிர் இன் குடங்கையர்=தளிர் போன்ற மெல்லிய உள்ளங்கை யிவைகளை யுடையவர்கள், அம் பொன் ஆரம்=அழகிய பொன்மாலை தரித்துள்ள, தந்தியின்=யானை போலவும், குவடின்=மலைபோலவும் பருத்துள்ள, தனங்கள் இரண்டையும்=கொங்கைகள் இரண்டும், குலை கொண்டு விண்டவர் தம்=நிலை கெட்டு வெளிவந்தவர்கள், இத்தகைய பொது மகளிரது, கடம் படியும்=உடலில் தோய்கின்ற, கவண் திய=கவண் கல் போல வேகமாகப் பாய்கின்ற தீய. சிந்தை ஆமோ=மனம் ஆகுமோ? (ஆகாது)

பொழிப்புரை

கடலில் மந்தரகிரியைச் சுழலவைத்துக் கடைந்து அமுதத்தை எடுத்தவரும், அச்சங்கொண்ட இந்திரனுடைய அரண்மனை, செல்வம், சுகம் முதலிய எல்லா வாழ்வையும் பெறுமாறு, கடலில் தோன்றிய, அரம்பையராதிய நடனமாதர்களையும் சிந்தாமணி முதலிய மதிக்கத்தக்க பொருள்களையும் பங்கிட்டு வழங்கியவரும், நடனம் செய்தவரும், இலக்குமி நாயகரும், மங்கலபாடகர் பாடிநின்ற இலங்கையில் வாழ்ந்த இராவணனுடைய தலைகள் பொடியாகும்படி வென்ற மாயவரும் தமது வயிற்றில் அண்டங்கள் அனைத்தும் உண்ட உள்ளங்கையருமாகிய திருமால் புகழும்படி, ஒளிமிகுந்த திரிபுரங்களை எரித்துப் பொடியாக்கிய சிவபெருமானுடைய இடப்பாகத்தில் வீற்றிருப்பவரும், சகல கலைகளுக்குந் தலைவியாகிய வாகீச்வரியும் சுகத்

தைச் செய்பவரும் ஆகிய உமாதேவியாரது திருப்புதல்வரே என்று பிரமதேவனும் புகழ, ஒளியும் மேன்மையும் படைத்த திருவம்பலத்தில் விளங்குந் தனிப்பெருந் தலைவரே! அழகிய கூந்தலில் பூங்கொத்துக்களையுடையவர்கள்; பிறைமதியனைய வளமான புருவங்களையும், கயல்மீன், அம்பு, அம்பின் அலகு போன்ற கண்களையுடைய அரம்பையரது அழகையும், சந்திரனையொத்த முகத்தையும் உடைய மாதர்கள்; கூந்தலின் ஒளி அழகுகளில் ஈடுபட்டுத் திரிந்து, சுவையுள்ள பழத்தின் சாரத்தைக் கொண்ட வாயூறலின் இன்பம், கிளி குயில்போன்ற இன்சொல் விரும்பும்படியான அழகிய முத்துக்கள்போன்ற பற்கள், வளப்பமிக்க கமுகுபோன்ற கழுத்து, பசிய மூங்கில்போன்ற குளிர்ந்த புயங்கள், தளிர்போன்ற மெல்லிய உள்ளங்கை இவைகளைப் படைத்தவர்கள்; அழகிய பொன்மாலை தரித்துள்ள யானைபோலவும் மலைபோலவும் பருத்துள்ள தமது தனங்கள் இரண்டும் நிலைகெட்டு வெளிப்பட நின்றவர்கள் ஆகிய இத்தகைய பொதுமாதர்களின் உடலில் தோய்கின்ற தீயசிந்தை ஆகுமோ? ஆகாது.

விரிவுரை

கொந்தரங்குழல்:—

அம் குழல் கொந்தர் என்று பதப்பிரிவு செய்க.

கொந்து—பூங்கொத்து.

அழகிய கூந்தலில் பூங்கொத்துக்களைச் சொருகி பொது மாதர்கள் ஆடவர் உள்ளத்தை வசப்படுத்துவார்கள்.

கண்கயலுஞ் சரங்கணை:—

பெண்களின் கண்கள், கயல்மீன் போலவும், அம்பு போலவும், அம்பின் அலகுபோலவும் விளங்கும்.

கணை—அம்பின் அலகு.

ரம்பைய ரந்தமும்: —

அரம்பையர் என்ற தெய்வலோகத்து நடனமாதர்களின் அழகைக் கொண்டவர்கள்.

சசி துண்ட மாதர்.—

சசி—சந்திரன்; துண்டம்—முகம். சந்திரனைப் போன்ற முகம் உடையவர்கள்.

தந்தவந்தரளம்:—

அம் தரளம் தந்த—என்று சொற்களை மாற்றி அமைக்க.

அழகிய முத்துப்போன்ற பற்கள்.

கடம் படியும்:—

கடம்—உடம்பு.

பொதுமாதரின் உடலைத் தழுவி அதில் முழுகுவர்.

கவண்டிய சிந்தையாமோ.—

கவண் திய—தீய என்ற சொல் திய எனக் குறுகியது. கவண்கல் போல் வேகமாகச் செல்லும் தீய சிந்தையாகாது என்கின்றார்.

மந்தரங்கடலுஞ் சுழன்றமுர்தங் கடைந்தவன்:—

இந்திரனுக்கு வளமையும் வாழ்வும் பெருகும் பொருட்டு திருமால் பாற்கடலில் மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியைத் தாம்பாகவும் அமைத்துக் கடைந்தார்.

மங்குலி!—

இந்திரன். மங்குல்—மேகம். மேகத்தை வாகனமாகக் கொண்டதனால் இந்திரன் மங்குலி என்று பேர்பெற்றான்.

வந்த ரம்பையெ ணும் பகிர்ந்து:—

பாற்கடலில் தன்வந்தரி, அமுதம், அமுதத்துடன் அறுபது கோடி அரம்பையர், இவர்களுக்குத் தோழியர், உச்சைசிரவம் என்ற வெள்ளைப் புரவி, கௌத்துவமணி, சிந்தாமணி, சூடா மணி, காமதேனு, சந்திரன், ஐராவதம், இலக்குமி, பஞ்சதருக் கள், வாருணி முதலியவை தோன்றின.

இவைகளில் திருமகளையும், கௌஸ்துவமணியையும் திருமால் தாம் ஏற்றுக்கொண்டார். சூடாமணியை நிமியென்ற வேந்தனுக்குத் தந்தார், (இதுதான் சீதைதந்த அடையாளம்) ஐராவதம் உச்சைச்சிரவம் காமதேநு பஞ்சதருக்கள் முதலிய செல்வங்களை இந்திரனுக்கு ஈந்தார்.

வண்டர்:—

வண்டர்—மங்கலப் பாடல் பாடுபவர். அல்லது அரச னிடம் நாழிகை யறிவிப்பவர்.

உம்பலின்கலை மங்கை!—

உம்பல்—எழுச்சி.

சகல கலைகளுக்குந் தலைவி உமாதேவி.

"சகலகலா வியாபினிம்" என்கின்றது அதர்வணவேதம்.

கருத்துரை

அம்பலநாதா! அரிவையர்மீது செல்லும் சிந்தையை மாற்றியருள்க.

திருப்புகழ்

தியங்குஞ்சஞ் சலந்துன்பங்
கடந்தொாந்தஞ் செறிந்தைந்திந்
த்ரியம்பந்தந் தருந்துன்பம் படுமேழை
திதம்பண்பொன் றிலன்பண்டன்
தலன்குண்டன் சலன்கண்டன்
தெளிந்துன்றன் பழந்தொண்டென் றுயர்வாகப்

புயங்கந்திங் களின்துண்டங்
குருந்தின்கொாந் தயன்றன்கம்
பொருந்துங்கங் கலந்தஞ்செஞ் சடைசூடி
புகழ்ந்துங்கண் டுகந்துங்கும்
பிடுஞ்செம்பொன் சிலம்பென்றும்
புலம்பும்பங் கயந்தந்தென் குறைதீராய்

இயம்புஞ்சம் புகந்துன்றுஞ்
சுணங்கன்செம் பருந்தங்கங்
கிணங்குஞ்செந் தடங்கண்டுங் களிகூர
இடும்பைங்கண் சிரங்கண்டம்
பதந்தந்தங் கரஞ்சந்தொன்
றெலும்புஞ்சிந் திடும்பங்கஞ் செயும்வேலா

தயங்கும்பைஞ் சுரும்பெங்குந்
தனந்தந்தந் தனந்தந்தந்
தடந்தண்பங் கயங்கொஞ்சுஞ் சிறுகூரா
தவங்கொண்டுஞ் செபங்கொண்டுஞ்
சிவங்கொண்டும் ப்ரியங்கொண்டுந்
தலந்துன்றம் பலந்தங்கும் பெருமாளே.

பதவுரை

இயம்பும் சம்புகம்=சொல்லப்படுகின்ற நரிகள், துன்றும்=நெருங்கும், சுணங்கள்=நாய்கள், செம் பருந்து அங்கு அங்கு=சிவந்த பருந்துகள் அங்கங்கே, இணங்கும் செந் தடங் கண்டும்=கூடி நிற்கும் ரண களத்தைப் பார்த்து, களி கூர=மகிழ்ச்சி மிகும்படி, இடும்பை=துன்பம் உண்டாக, கண்=கண்கள், சிரம்=சிரங்கள், கண்டம்=கழுத்துக்கள், பதம்=கால்கள், தம் தம் கரம்=கைகள், சந்து ஒன்று எலும்பும் சிந்திடும்=பொருத்தங்கள் ஒன்றுபட்ட

எலும்புகள் ஆகிய இவை யெல்லாம் அழிவு படும்படி. பங்கம் செயும் வேலா=துண்டு செய்த வேலவரே! தயங்கும்=ஒளி கொண்ட, பை சுரும்பு எங்கும்=பசிய வண்டுகள் எல்லா இடத்தும், தனந் தந்தந் தனந் தந்தம்=தனந் தந்தந் தனந் தந்தம் என்னும் ஒலியுடன், தடம் தன் பங்கயம் கொஞ்சும்= குளங்களில் உள்ள குளிர்ந்த தாமரை மலர்களில் கொஞ்சுகின்ற, சிறுகூரா=சிறுகூர் என்னுந் தலத்தில் வீற்றிருப்பவரே! தவம் கொண்டும்=தவநெறியை மேற்கொண்டவர் களும், செபம் கொண்டும்=செபஞ் செய்பவர்களும் சிவம் கொண் டும்=சிவத்தை நாடும் அடியார்களும், ப்ரியம் கொண்டும்=அன்பு கொண்டு, துன்றும் தலம்=நாடி அடைகின்ற தலமாகிய, அம்பலம் தங்கும்=சிதம்பரத்தில் பொன்னம்பலத்தில் எழுந்தருளியிருக்கும், பெருமாளே=பெருமையில் மிகுந்தவரே! தியங்கும் சஞ்சலம்=அறி வைக் கலக்கும் மனக் கவலையும், துன்பம்=துன்பமுங் கொண்ட, கடம் தொந்தம் செறிந்து=இவ்வுடலில் சம்பந்தப்பட்டு நெருங்கி யுள்ள, ஐந்து இந்த்ரியம் பந்தம் தரும்=மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐம்பொறிகளின் தொடர்பினுல் உண்டாகும், துன்பம் படும் ஏழை=துன்பத்தில் வேதனைப்படுகின்ற அறிவில்லாதவன், திதம் பண்பு ஒன்றிலன்=நிலையான நற்குணம் ஒன்றும் இல்லாதவன், பண்டன்=ஆண்மையில்லாதவன்; தலன்=கீழானவன், குண்டன்= இழிந்தவன், கலன் கண்டன்—கோப வீரன், இத்தகைய அடியேன் தெளிந்து=அறிவு தெளியப் பெற்று, உன்றன் பழம் தொண்டு என்று உயர்வு ஆக=பழைய அடியான் என்னும் உயர்நிலையை அடையும் படி, புயங்கம்=பாம்பு, திங்களின் துண்டம்=பிறைச்சந்திரன், குருந் தின் கொந்து=குருந்த மலரின் கொத்து, அயன் தன் கம்—பிரமனு டைய தலை, பொருந்தும் கம்=பொருந்திய கங்கை, கலந்த அம்= இவை சேர்ந்த அழகிய, செம் சடை சூடி=சிவந்த சடையராகிய சிவபெரு மான், புகழ்ந்தும்=புகழ்ந்தும், கண்டு உகந்தும்=பார்த்து மகிழ்ந்தும், கும்பிடும்=கும்பிடுகின்ற உமது, செம் பொன் சிலம்பு என்றும் புலம் பும்=சிவந்த பொற் சிலம்பு எப்போதும் ஒலிக்கின்ற, பங்கயம் தந்து=தாமரை மலர் போன்ற திருவடியைத் தந்து, என் குறை தீராய்=எனது குறைகளைத் தீர்த்தருளுவாய்.

பொழிப்புரை

சொல்லப்படுகின்ற நரிகள், நெருங்கும் நாய்கள், செம் பருந்துகள் அங்கங்கே கூடிநிற்கும் ரணகளத்தைப் பார்த்து மகிழ்ச்சி மிகும்படி அரக்கர்கள் துன்பம் உண்டாக, அவர் களின் கண் தலை கழுத்து கால் கை ஒன்றுபட்ட எலும்புகள் இவையெல்லாம் அழியுமாறு துண்டாக்கிய வேலவரே! ஒளி கொண்ட பசிய வண்டுகள் எல்லா இடத்தும் தனந் தந்தம் தனந் தந்தம் என்னும் ஒலியுடன் குளங்களில் உள்ள குளிர்ந்த

தாமரை மலர்களில் கொஞ்சுகின்ற சிறுசுவர் என்னுந் திருத் தலத்தில் வாழ்பவரே! தவத்தை மேற்கொண்டவரும், செயம் புரிபவரும், சிவத்தை விரும்பிய அடியவர்களும் அன்புடன் நாடி அடைகின்ற தலமாகிய சிதம்பரத்தில் பொன்னம்பலத் தில் எழுந்தருளி யிருக்கும் பெருமித முடையவரே! அறிவைக் கலக்கும் மனக் கவலையும், துன்பமும் கொண்ட இவ்வுடலில் சம்பந்தப்பட்டு நெருங்கியுள்ள, மெய்வாய் கண் மூக்கு செவி என்ற ஐந்து இந்திரியங்களினுல் விளையுந் துன்பத்தால் வேதனைப்படுகின்ற அறிவில்லாதவன்; நிலைத்த நற்குணம் ஒன்றும் இல்லாதவன்; ஆண்மையற்றவன்; கீழானவன்; இழிந் தவன்; கோபவீரன்; இத்தகைய அடியேன் அறிவு தெளிந்து உமது பழைய அடியான் என்னும் உயர்நிலையை அடையுமாறு, பாம்பு, பிறைச்சந்திரன், குருந்த மலரின் கொத்து, பிரம னுடைய தலை, பொருந்திய கங்கைநீர், இவைகளைச் சடையில் சூடிய சிவபெருமான், புகழ்ந்தும், பார்த்து மகிழ்ந்தும் கும்பிடு கின்ற, செம்பொன் சிலம்பு எப்போதும் ஒலிக்கின்ற தாமரை மலரையொத்த உமது திருவடியைத் தந்து என் குறைகளைத் தீர்த்தருள்வாயாக.

விரிவுரை

தியங்கும் சஞ்சலம்: —

அறிவைத் தியங்க வைக்கின்ற மனக்கவலை.

துன்பம்:—

உடம்புக்கு வருகின்ற பனி மழை குளிர் வெயில் நோய் பசி முதலியவற்றுல் துன்பங்கள்.

முன்னையது உள்ளக் கவலை; பின்னையது உடற் கவலை. இந்த இரண்டையும் சுவாமிகள் கந்தரலங்காரத்தில்,

"புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே"

என்று கூறுகின்றுர்.

கடந் தொந்தஞ் செறிந்தைந்த்ரியம்பந் தந்தருந் துன்பம்:—

கடம்—உடம்பு.

இந்த உடம்புடன் தொடர்புடைய மெய் வாய் கண் நாசி செவி என்ற ஐந்து இந்திரியங்களால் பல துன்பங்கள் விளை கின்றன.

"இந்த்ரிய தாபசபலமற வந்துநின்கழல் பெறுவேனோ"

—(ஓலமறை) திருப்புகழ்

ஏழை:—

ஏழை என்ற சொல்லுக்கு அறிவற்றவன் என்பது பொருள். பணம் இல்லாதவன் என்ற பொருளில் இன்று உலகம் பேசுகின்றது.

ஆனால் இலக்கியங்களில் ஏழை என்ற சொல் அறிவற்றவன் என்ற பொருளிலேயே பேசப் பெறுகின்றது.

"ஏழைமைப் பாலதன்றோ" —கந்தபுராணம்

திதம் பண்பொன்றிலன்:—

திதம்—நிலைபேறு

நிலைத்த நற்குணம் ஒன்றேனும் இல்லாதவன்.

பண்டன்:—

பண்டன்—ஆண்மையில்லாதவன். மனிதனுக்கு ஆண்மையிருக்க வேண்டும். ஆண்மையுடையவன் பொறிபுலன்களையடக்கி நன்னெறியில் நிற்பான்.

தலன்;—

தலன்—கீழானவன்.

உள்ளத்தைக் கீழ்நெறியில் போகவிட்டு சிறுநெறி நிற்பவன்.

குண்டன்:—

குண்டன்—இழிந்தோன்.

சலன் கண்டன்:—

சலம்—கோபம்; கண்டன்—வீரன். கோபிப்பதில் வீரன். கோபமே பாபத்தை விளைவிக்கும்.

தெளிந்துன்றன் பழந் தொண்டுடன் றுயர்வாக:—

"அறிவு தெளிந்து முருகா! உனது பழமையான அடியான் என்னும் உயர்நிலையை அடியேன் பெறவேண்டும்" என்று வேண்டுகின்றார்.

அயன்றன் கம்:—

கம்—தலை.

பிரமனது தலையைக் கிள்ளி சிவபெருமான் அதை மற்றவர்கள் அறிந்து அகந்தை கொள்ளாதிருக்கும் பொருட்டு அணிந்து கொண்டார்.

பொருந்துங்கம்:—

கம்—கங்கை.

அரவு, மதி, தலைமாலை, குருந்தமலர், நதி, இவைகளைச் சென்னியில் சூடிக்கொண்டவர் சிவபெருமான். இதனால் பிஞ்ஞுகன் என்று பேர் பெற்றார்.

புகழ்ந்துங்கண் முகந்துங் கும்பிடும்:—

சிவபெருமான் முருகப் பெருமானைப் புகழ்ந்து கண்டு மகிழ்ந்துங் கும்பிட்டும் சிஷ்யபாவத்தை உலகுக்குக் காட்டியருளினார்.

பங்கயந்தந்தென் குறைதீராய்:—

பங்கயம்—உவம ஆகுபெயராகத் திருவடியைக் குறிக்கின்றது.

திருவடியைத் தந்தால் எல்லாக் குறைகளும் நீங்கும்.

இயம்பும் சம்புகம்:—

சொல்லப்படுகின்ற நரிகள்.

இந்தப் பாடலில் 5 வது அடியும் 6 வது அடியும் போர்க்கள வர்ணனை.

தவங் கொண்டும்:—

தவநெறியை மேற்கொண்ட ஞானிகள்.

செபங் கொண்டும்:—

சதா மந்திர செபம்புரியும் மந்திரயோகிகள்.

சிவங்கொண்டும்:—

சிவத்தையே நாடும் அடியார்கள். இவர்கள் யாவரும் நாடி யடைகின்ற திருத்தலம் சிதம்பரம்.

கருத்துரை

அம்பலநாதா! உன் பதமலர்தந்து குறை தீர்த்தருள்.

திருப்புகழ்

பருவம் பணைத்தி ரண்டு கரிகொம் பெனத்தி ரண்டு
  பவளம் பதித்த செம்பொ னிறமார்பிற்
படருங் கனத்த கொங்கை மினல்கொந் தளித்து சிந்த
  பலவிஞ் சையைப் புலம்பி யழகான
புருவஞ் சுழற்றி யிந்த்ர தநுவந் துதித்த தென்று
  புளகஞ் செலுத்தி ரண்டு கயல்மேவும்

பொறிகண் சுழற்றி ரம்ப பரிசம் பயிற்றி மந்த்ர
பொடிகொண் டழிக்கும் வஞ்ச ருறவாமோ

உருவந் தரித்து கந்து கரமும் பிடித்து வந்து
உறவும் பிடித்த ணங்கை வனமீதே
ஒளிர்கொம் பிணேச்ச வுந்த ரியவும் பலேக்கொ ணர்ந்து
ஒளிர்வஞ் சியைப்பு ணர்ந்த மணிமார்பா

செருவெங் களத்தில் வந்த அவுணன் தெறித்து மங்க
சிவமஞ் செழுத்தை முந்த விடுவோனே
தினமுங் களித்து செம்பொ னுலகந் துதித்தி றைஞ்சு
திருவம் பலத்த மர்ந்த பெருமாளே.

பதவுரை

உருவம் தரித்து உகந்து=மாறு வடிவங்களான வேடன், வளையல் செட்டி, தவ முனிவர் ஆகிய வடிவங்களைத் தாங்கி மனமகிழ்ச்சியுடன், கரமும் பிடித்து உவந்து=வள்ளிநாயகியின் கரத்தையும் பற்றி மகிழ்ந்து, அணங்கை உறவும் பிடித்து=தெய்வ மகள் போன்ற அப் பிராட்டியை நட்பு பூண்டு, வன மீதே=வள்ளிமலைக் கானகத்தில், ஒளிர் கொம்பினை=விளங்குகின்ற தந்தத்தையுடைய, சவுந்தரிய= அழகிய, உம்பலை கொணர்ந்து=கணபதியை யானையாக வர வழைத்து, ஒளிர் வஞ்சியை புணர்ந்த=விளங்குகின்ற வள்ளியை மணந்து கொண்ட, மணி மார்பா=அழகிய திருமார்பரே! செரு வெம் களத்தில் வந்த=வெப்பமான போர்க்களத்தில் வந்த, அவுணன் தெறித்து மங்க=சூரபன்மன் பிளவுபட்டு அழிய, சிவம் அஞ்சு எழுத்தை முந்த=சிவத்தின் பஞ்சாட்சரத்தின் ஆற்றலையுடைய வேலாயுதத்தை முற்பட, விடுவோனே=செலுத்தியவரே! தினமும் களித்து=நாள்தோறும் மகிழ்ச்சியுடன், செம் பொன் உலகம் துதித்து இறைஞ்சு=செவ்விய பொன்னுலகத்தினராம் தேவர்கள் துதிசெய்து வணங்கும், திரு அம்பலத்து அமர்ந்த=தில்லைத் திருவம்பலத்திலே வீற்றிருக்கும், பெருமாளே=பெருமையிற் சிறந்தவரே! பருவம்= இளம்பருவத்திலே, பணைத்து இரண்டு கரி கொம்பு என திரண்டு= பருத்து யானைக் கொம்புகள் என்று சொல்லும்படி திரட்சியுற்று, பவளம் பதித்த செம் பொன்நிற மார்பில்=பவளம் பதித்தது போன்ற செவ்விய பொன்னிறமுடைய மார்பிலே, படரும்=பரந்துள்ள, கனத்த கொங்கை=கனங்கொண்ட கொங்கைகள், மினல் கொந்தளித்து சிந்த=மின்னல் மின்னி எழுந்தது போல் ஒளி வீச, பல விஞ்சையை புலம்பி=பலவிதமான மாய வித்தைப் பேச்சுக்களைப் பேசி, இந்த்ர தநு வந்து உதித்தது என்று=வான வில் வந்து தோன்றினது

என்னும்படி. அழகு ஆன புருவம் சுழற்றி=நமது அழகிய புருவத்தைச் சுழற்றி, புளகம் செலுத்து=புளகந் தருகின்ற, இரண்டு கயல் மேவும்=இரண்டு கயல் மீன்போல உள்ள, பொறி கண் சுழற்றி= இளைஞரைப் பிடிக்கும் பொறி போன்ற கண்களைச் சுழற்றி, ரம்ப பரிசம் பயிற்றி=நிரம்பவும் தொட்டுப் பயின்று, மந்த்ர பொடி கொண்டு அழிக்கும் வஞ்சர்=மந்திரப் பொடியாகிய சொக்குப் பொடி கொண்டு அழிக்கின்ற வஞ்சகர்களாம் பொது மாதரது, உறவு ஆமோ=சம்பந்தம் ஆகுமோ? (ஆகாது)

பொழிப்புரை

வள்ளிமலைக் காட்டிலே வேடன், வளையல் செட்டி, முதிய முனிவர் முதலிய வேற்று வடிவங்களைக் கொண்டு, மகிழ்ச்சியுடன் வள்ளிநாயகியின் கரத்தைப்பற்றி, உவகையுடன் அவருடைய நட்பைக்கொண்டு, விளங்குகின்ற அழகிய கொம்பினையுடைய யானையாக விநாயகப் பெருமானை வரவழைத்து, ஒளிபெற்ற வள்ளிபிராட்டியைப் மணந்துகொண்ட அழகிய திருமார்பினரே! வெப்பமான போர்க்களத்தில் வந்த சூரபன்மன் பிளந்து அழியுமாறு, சிவபஞ்சாட்சரத்தின் ஆற்றலையுடைய வேலாயுதத்தை முற்படச் செலுத்தியவரே! நாள்தோறும் களிப்புடனே, செம்பொன் உலகவாசிகளாகிய தேவர்கள் துதி செய்து வணங்கும் தில்லைத் திரு. அம்பலத்தில் எழுந்தருளியுள்ள பெருமிதமுடையவரே! இளம்பருவத்தில், பருத்து, இரு யானைத் தந்தங்கள்போல் திரண்டு, பவளம் பதித்துவைத்தது போன்ற செம்பொன் நிறமுள்ள மார்பில் பரந்து கனங்கொண்ட கொங்கைகள், மின்னல் மின்னி எழுந்ததுபோல் ஒளிவீச, பல மாயவித்தைப் பேச்சுக்களைப் பேசி, வானவில் வந்து தோன்றியது போன்ற அழகிய புருவங்களைச் சுழற்றி புளகம் தரும் கயல்மீன் போன்றதும், இணை ஏர்களைப் பற்றும் பொறி போன்றதுமான கண்களைச் சுழற்றி, நிரம்பவும் தொட்டுப் பயின்று, மந்திரப் பொடியாய சொக்குப் பொடி தூவி அழிக்கின்ற வஞ்சகப் பொதுமாதருடைய உறவு ஆகுமோ? (ஆகாது).

விரிவுரை

இத்திருப்புகழில் முதல் நான்கு அடிகள் பொதுமாதருடைய அங்க இலக்கணங்களை இலக்கியச் சுவை ததும்பக் கூறுகின்றன.

உம்பலைக் கொணர்ந்து:—

உம்பல்—யானை.

விநாயகர் யானை வடிவாக வந்து வள்ளிநாயகியை முருகர் மணந்துகொள்ள அருளினூர்.

"   .   ,,   இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே"   —கைத்தல (திருப்புகழ்)

சிவமஞ்செழுத்தை முந்த விடுவோனே:—

வேலாயுதத்தை பஞ்சாட்சரம் என்று அருணகிரிநாதர் இங்கு கூறுகின்ருர். ஓர் எழுத்தின் ஆற்றலையுடையது என்று காட்டுகின்ருர். அப்பர் பெருமான் திருவைந்தெழுத்தை வினையை அழிக்கும் படைக்கலம் என்கின்ருர்.

"படைக்கலமாகவுன் நாமத்தெழுத்தஞ்சென் நாவிற் கொண்டேன்"

பஞ்சாட்சரம் செபித்தோருடைய வினையை யகற்றுவது. வேலும் வழிபட்டோருடைய வினையை விலக்குவது.

சம்பந்தர் "வினைப்பகைக்கு அத்திரமாவன்" என்கின்ருர்.

உறும் இடுக்கண் வினை சாடும் என்று வேல் வகுப்பில் அருணகிரியார் கூறுகின்ருர். ஆகவே வேலும் பஞ்சாட்சரமும் ஒருதன்மையன.

கருத்துரை

திருவம்பலத்துறை தேவா! பொதுமாதர் உறவையகற்றி யாண்டருள்.

கற்பு

பொன்னம்மாள் கூறிய பொன்மொழி

பொன்னம்மாள் நல்ல கூரிய அறிவும் சீரிய ஒழுக்கமும் படைத்தவள். தன் மக்களுக்கு வெறும் உணவு மட்டுந்தந்து வளர்க்காமல், உயர்ந்த வுணர்வும் படைத்து வளர்த்து வந்தாள்,

ஒருநாள் தன் செல்வப் புதல்வர்களை அருகில் அமரச் செய்து அறவுரை பகரலானாள்.

"என் செல்வங்களே! நாம் பிறரை ஏமாற்றக் கூடாது. ஏமாற்றுவோர் ஏமாறுவார்கள். பிறரை ஏமாற்றியே வாழக் கருதுவோர் தாங்கள் ஏமாந்து ஏங்குவார்கள். இந்த அரிய கருத்தை விளக்க ஒரு வரலாற்றைக் கூறுகின்றேன் கேளுங்கள்,

சிங்கபுரத்தில் குப்பன் என்ற ஒருவன் வாழ்ந்தான். அவன் எப்போதும் பிறரை ஏமாற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான்.

வங்கபுரத்தில் சுப்பன் என்ற ஒருவன் இருந்தான். அவன் ஜகஜாலப் புரட்டன்; பிறரை வஞ்சிப்பதில் சமர்த்தன். ஏமாற்றியே பிழைக்க வேண்டும் என்று எண்ணுபவன். உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற எண்ணமே அவனுக்குக் கிடையாது.

குப்பன் ஒருநாள் மண் ஏனத்தில் சாணத்தை நிரப்பி அதன்மீது சோற்றுப் பருக்கைகளைப் பரப்பி மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டான்.

சுப்பன் ஒரு தகரடப்பாவில் மணலை நிரப்பி அதன்மீது சிறிது அரிசியைப் பரப்பிக் கொண்டு புறப்பட்டான்.

இருவரும் வழியில் ஒரு சத்திரத்தில் சந்தித்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டார்கள்.

குப்பன் சுப்பனைப் பார்த்து, "அண்ணே! வணக்கம். உங்களை நான் சந்தித்தது எனக்கு பரம திருப்தி. உங்களைப் போன்ற உத்தமர்களை இந்தக் காலத்தில் காண்பது அரிது. என் மனைவி ஒரு அசடு. கொஞ்சம்கூட சமர்த்து இல்லாதவள். என்ன செய்வது? அவளை வைத்துக் கொண்டுதான் வாழவேண்டியிருக்கின்றது. எனக்குப் பசியேயில்லை. இந்த நிலையில் அவள் மிகவுயர்ந்த அன்னத்தைக் கட்டிக் கொடுத்திருக்கின்றாள். இதைச் சாப்பிட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றேன். பசியாமல் புசிக்கக் கூடாது" என்றான்.

சுப்பன் "அண்ணே! என் மனைவியும் இதே மாதிரி ஒரு மக்குப் பிண்டம். கட்டுச்சாதம் கட்டிக் கொடு என்றேன். அவள் அரிசியைக் கொடுத்து இருக்கின்றாள். எனக்கோ பசி காதை யடைக்கின்றது. இனி அடுப்புப் பற்றவைத்து இந்த அரிசியைச் சோறாக்கிச் சாப்பிடுவ தற்குள் பாதி உயிர் போய்விடும். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டு இருந்தேன். ஒருவருக்கு ஒருவர் உபகாரம் புரிய வேண்டும், உனக்குப் பசியில்லை, எனக்குக் கடும்பசி. நீ இந்த அரிசியை எடுத்துக் கொள்; நீ கொணர்ந்த அன்னத்தை எனக்குத் தந்துவிடும். உனக்கும் எனக்கும் நல்லது" என்றான்.

குப்பனும் சுப்பனும் ஒருவரை யொருவர் ஏமாற்றிவிட்டதாக எண்ணிக் கொண்டார்கள். குப்பன் கொணர்ந்த சாணிச்சட்டியைச் சுப்பன் வாங்கிக் கொண்டு மகிழ்ந்தான். மணல் ஏனத்தைக் குப்பன் வாங்கிக் கொண்டு ஒரு கண நேரத்தில் பிரிந்து போனார்கள். சிறிது தூரம் போய் குப்பன் தான் அதிர்ஷ்டசாலி யென்று கருதி ஏனத்தை உற்றுப் பார்த்தான். மேலே யிருந்த அரிசியைக் கிண்டினான். அவ் வளவும் மணல்; "அட பாவி! சண்டாளா? என்னை ஏமாற்றிவிட்டனையா?" என்று கூறிக் கொண்டான்.

சுப்பன் சிறிது தூரம் போய் ஒரு குளத்தில் கைகால்களை யலம்பி பெருமகிழ்ச்சியுடன் ஏனத்தில் உள்ள அன்னத்தை உண்ணலாம் என்று கிண்டினான். அவ்வளவும் சாணி. "அட பாவீ! என்னை ஏமாற்றிவிட்டனையா! சாணியை அன்னம் என்றாயே? உன் வாயில் சாணிதான் விழும்" என்று கூறி வருந்தினான்.

இவ்வாறு சாணிச் சட்டியும் மணல் சட்டியும் பிறரை ஏமாற்றித் தாங்களும் ஏமாந்து போனார்கள்.

ஒருநாள் குப்பனும் சுப்பனும் ஒரு இடத்தில் சந்தித்தார்கள். குப்பன் "என்ன அண்ணே! என்னையே ஏமாற்றி விட்டாயே?" என்றான். சுப்பன் "அண்ணே! நீயுந்தான் என்னை ஏய்த்துவிட்டாயே?" என்றான். "சரி, இனி நாம் ஒருவரை யொருவர் ஏமாற்றுதல் கூடாது. நீயும் சமர்த்தன்; நானும் சமர்த்தன். சமர்த்தன் சமர்த்தனை ஏமாற்ற முடியாது. நாம் இருவரும் சேர்ந்து மற்றவரை ஏமாற்றுவோம்" என்று பேசிக் கொண்டு இரு இந்திரசித்துக்களும் கூடிப் புறப்பட்டார்கள்.

வயல்களும் சோலைகளும் சூழ்ந்த அருமையான தோட்டத்துக்கு நடுவில் ஒரு வீட்டில் கிழவி யொருத்தி வாழ்ந்து கொண்டிருந்தாள். அவளிடம் நிரம்பப் பணம் இருக்கின்றது என்று இருவரும் அறிந்து அக்கிழவியை ஏமாற்றிக் கொள்ளை யடிக்க வேண்டும் என்று திட்டம் இட்டார்கள். கிழவியிடம் போய்க் கள்ளக் கும்பிடு போட்டார்கள்.

கிழவி "வாருங்கள்; இருங்கள். உங்களுக்கு என் ஆசீர்வாதம். என்ன வேலையாக வந்தீர்கள்? என்னால் உங்களுக்கு என்ன ஆகவேண்டும்?" என்று அன்புடன் கேட்டாள்.

"பாட்டீ! நாங்கள் கடுமையாக உழைப்போம். உங்களைப்பற்றிப் பலரும் பலவாறு புகழ்ந்து கூறினார்கள். எங்களுக்குப் பணங்காசு மீது பற்று கிடையாது. செத்தால் கூடவருவது ஒன்றுமில்லை. உண்ண வுணவும் உடுக்க உடையும் கிடைத்தால் போதும்; பசிக்குப் பழங்கஞ்சியும், மானத்தைக் காக்க 4 முழத்துண்டும் போதும். வடை பாயசம் வேண்டாம்; பட்டு பீதாம்பரம் வேண்டாம். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. நாங்கள் உனது அடிமைகள். இந்தக் கணமுதல் உனக்கு வேலைசெய்து வயிற்றை வளர்த்துக் கொள்ளுவோம்" என்று தந்திரமாகக் கூறினார்கள்.

கிழவி தனக்குள் இந்தப் புரட்டர்கள் நம்மை ஏமாற்ற வந்திருக்கின்றார்கள். இவர்கட்கு நான் ஏமாறுவேனா? என்னை இவர்கள் அறிந்திலர். இவர்களை நான் நன்கு பயன்படுத்திக் கொள்ளுவேன் என்று எண்ணினாள்.

"அப்பன்களே! உங்கள் வரவுக்குச் சந்தோஷப்படுகின்றேன். எனக்கு ஒரு பசுமாடு இருக்கின்றது. அது பரமசாது. ஒருவன் அந்த மாட்டை மேய்த்து வரவேண்டும். ஒரு கால்காணி நிலம் இருக்கின்றது. அதற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தொட்டியேத்த மிட்டு ஒருவன் இந்த வேலை செய்யவேண்டும்; சுலபமான வேலைகள். இந்த பணியைச் செய்துவிட்டு வயிறுார உண்டு, பாயாரப் படுத்து வாருங்கள் என்றாள்,

குப்பனும் சுப்பனும் பழைய சோற்றைத் தின்றுவிட்டுப் புறப்பட்டார்கள். குப்பன் பசுமாட்டை மேய்ச்சலுக்கு ஓட்டிக்கொண்டு போனான். சுப்பன் தண்ணீர் இறைக்கலானான்.

பசுமாடு தும்பை அறுத்துக் கொண்டு ஓடியது. அது அடங்காது ஓடியது. அதனுடன் ஓடி ஓடி குப்பன் வாடி வருந்தினான். காட்டிலும் மேட்டிலும் கால்கடுக்க நடந்தான். மாட்டைத் தொடர்ந்தான். அவன் பஞ்சு படாதபாடு பட்டான்.

சுப்பன் தண்ணீரை இறைத்து இறைத்து ஓய்ந்தான். வாய்க்காலில் மறைமுகமாகவுள்ள சுரங்க வழியே சென்று வேறு பக்கம் உள்ள கிழவியின் நிலத்தை நிரப்பியது. மாலைவரை வேலை செய்து நிலம் நீர் பாயாது அயர்ந்தான். ஓயாது வேலை செய்தும் பயன் இன்றி இளைத்தான்.

அன்றிரவு குப்பனும் சுப்பனும் உண்டு ஒரு இடத்தில் கூடினார்கள். குப்பன், "அண்ணே! எனக்கு இன்று வேலையே யில்லை. மாடு

பரமசாது. ஒரு தோப்பில் மேயவிட்டு மரத்தடியில் குளுகுளு என்று சுகமாகப் படுத்து உறங்கினேன்" என்றான்.

சுப்பன், "தம்பீ! நான் கால்காணி நிலத்தில் சிறிது நேரம் நீரைப் பாய்ச்சிவிட்டு, பரம சுகமாகப் படுத்து நித்திரை செய்தேன். எத்தனை நேரந்தான் தூங்குவது? பொழுதே போகவில்லை. நாளைக்கு நான் மாட்டை மேய்ப்பேன். நீ வயலுக்கு நீர் பாய்ச்சு" என்றான்.

குப்பன், "எனக்கும் அதுதான் விருப்பம்" என்றான். மறுநாள் குப்பன் வயலுக்குத் தண்ணீர் இறைக்கலானான். சுப்பன் மாடு மேய்த்தான். இருவரும் இடர்ப்பட்டு வேதனை யடைந்தார்கள்.

குப்பன், "அட பாவீ! என்னை ஏமாற்றிவிட்டாயே! ஏண்டா, என்னிடமே புளுகுகின்றாயே" என்றான். சுப்பன் "அண்ணே! நீ மட்டும் பரம யோக்கியனா? என்னை நீ ஏமாற்றி விட்டாயே! அது அடங்காத மாடு. நான் பட்ட வேதனைக்கு எல்லையே யில்லை" என்றான்.

இந்தக் கிழவி சண்டிப்பேய். இவள் நம்மையே ஏமாற்றிவிட்டாள். இந்தச் சாண் வயிற்றை வளர்க்க நாம் இந்தப் பாடுபட வேண்டியுளது. இவளிடம் நிரம்பப் பணம் இருப்பதாகக் கேள்வி. நாம் இவளை ஏமாற்றி பணத்தைப் பறித்துக் கொண்டு போய்ப் பங்கிட்டுக் கொள்ளுவோம்" என்று பேசிக் கொண்டார்கள்.

மறுநாள் கிழவி குப்பனையும் சுப்பனையும் வேலைக்கு அனுப்பிவிட்டு, தன்னிடம் உள்ள தங்க நகைகளையும், தங்கப் பவுன்களையும், வெள்ளிச் சாமான்களையும் ஒரு ஏனத்தில் இட்டு வீட்டுக்குள் புதைத்து வைத்தாள்.

ஒரு பெரிய பெட்டியில் ஓடாஞ்சல்லிகளையும் கருங்கல் சல்லிகளையும் நிரப்பி மேல் மூடிவைத்து துணியால் பொதிந்து கட்டி வைத்தாள்.

குப்பனும் சுப்பனும் தங்கள் பணியை வெகு சிரமப்பட்டு முடித்துவிட்டுத் திரும்பி வந்தார்கள். கிழவி அவர்கட்கு நல்ல உணவு தந்து உபசரித்தாள்.

"என் அன்புச் செல்வங்களே! நீங்கள் என்பால் வந்தது பற்றி பெருமகிழ்ச்சி யடைகின்றேன். நான் கண்ணை மூடினால் என் செல்வங்கள் அனைத்தும் உங்களுக்குத்தான். எனக்கு வேறு சந்ததி கிடையாது. உறவும் கிடையாது. எல்லாம் நீங்கள்தான். இதோ பாருங்கள்; இந்தப் பெட்டியில் நான் சம்பாதித்துச் சேர்த்து வைத்த செல்வங்கள் இருக்கின்றன. இந்தக் காட்டில் நான் தனியே யிருக்கின்றேன். திருடர் பயம் நிறைந்த இடம். வருமுன் காப்பான் மதியுடையவன். ஆதலால் இந்தப் பெட்டியை நமது கிணற்றில் இறக்கிவிடுங்கள்.

இது பரம ரகசியமாக இருக்கவேணும். எனக்குப் பிறகு நீங்கள் இதை அடைவீர்களாக" என்ருள்.

கிழவியின் இன்னுரையை அவர்கள் உண்மையென்று நம்பினர்கள். பெட்டியை மெல்ல கிணற்றுக்குள் இறக்கிவிட்டார்கள். குப்பனும் சுப்பனும் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார்கள்.

கிழவி குடிசைக்குள் தூங்கிவிட்டாள். குப்பன் சுப்பனைப் பார்த்து "சுப்பா! நான் கூறுவது தப்பா? கிழவி தூங்குகின்ருள்.

கிணற்றில் விட்ட பணம் நிறைந்த பெட்டியை எடுத்துக்கொண்டு ஓடிவிடுவோம்" என்ருன். சுப்பன் சரி என்ருன்.

குப்பன் கிணற்றுக்குள் இறங்கினுன். சுப்பன் மேலிருந்து கயிற்றை உள்ளே விட்டான். குப்பன் உள்ளே இறங்கி பெட்டியைச் சோதித்தான். அவ்வளவும் சல்லிக்கற்கள். அடி பொல்லாத புழுத்தக் கிழவியே! நீ எங்களை ஏமாற்றிவிட்டனையே என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

பெட்டியைக் கயிற்றில் கட்டினுன். அந்தப் பெட்டிக்குள் அமர்ந்து மேல்முடியை மூடிக்கொண்டான்.சுப்பன் மேலே தூக்கினுன். சுப்பன் அதை மேலே இழுத்து எடுத்தான். இனி குப்பன் வந்தால் பாதி பங்கு கேட்பான். இந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது. இந்தப் பயலுக்குப் பங்கு தரக்கூடாது'' என்று கருதி பெட்டியைத் தலையில் வைத்துக்கொண்டு பிடித்தான் ஓட்டம். குடல் தெறிக்க ஓடினுன். எங்கே குப்பன் பின்தொடர்ந்து வந்து விடுவானே என்று பயந்து விரைந்து வெகுதூரம் ஓடினுன்.

இனி வரமாட்டான் என்ற தைரியம் பிறந்து, சத்தம் போட்டு அவனே பேசிக்கொண்டான். "அடேய் மடக் குப்பா? நீ ஏமாந்தனையா? இனி இந்தப் பணம் [பூராவும் என்னுடையதுதான்" என்று கூறினுன்.

தலைக்குமேல் இருக்கின்ற குப்பன், "தம்பீ சுப்பா! நீயா என்னை ஏமாற்றினுய். நான்தான் உன்னை ஏமாற்றினேன்" என்ருன்.

உடனே சுப்பன் பெட்டியைக் கீழே போட்டான். குப்பன் வெளிப் பட்டான்! பெட்டியில் இருந்து சல்லிக்கற்கள் உதிர்ந்தன.

ஒருவரை யொருவர் ஏமாற்ற முயன்று தாமே .ஏமாந்தார்கள். ஒருவனைப் பார்த்து ஒருவன் சிரித்தான்.

"சீ, நம் தொழிலும் ஒரு தொழிலா? ஏமாற்றி வாழும் வழி நல்லதல்ல. ஏமாற்றுபவனே ஏமாறுவான். இனி நாம் எவரையும் ஏமாற்றக்கூடாது. ஏதாவது ஒரு தொழில் புரிந்து வாழவேண்டும். அதுதான் வாழும் வழி" என்று பேசி நல்ல முடிவுக்கு வந்தார்கள். உள்ளந் திருந்தி தொழில் செய்து பிழைத்தார்கள்."

"ஆதலால் குழந்தைகளே! யாரையும் ஏமாற்றக் கூடாது'" என்று கதை சொல்லி முடித்தாள்.

மகாபாரதம்

அநுசாஸன பர்வம்

(144-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரௌரவத்திற்கு இருமடங்கு பெரியது மகா ரௌரவம் என்னும் நரகம். இங்கும் பெருந்துன்பத்தைப் பாவிகள் நுகர்கின்றார்கள். மூன்றாவது நரகம் கண்டகாவனம். இதுவும் முன்சொன்ன நரகங்களின் இருமடங்கு பெரியது. மகா பாதகங்களைச் செய்தவர்கள் வேதனையடைகின்றார்கள். நான்காவது நரகம் அக்கினிகுண்டம். இது கண்டகாவனத்தைவிட இருமடங்கு பெரியது. ஐந்தாவது அமாநுஷம் என்னும் நரகம். இதில் எயதும் துன்பங்கள் சொல்ல முடியாதவை. இந்த ஐந்து நரகங்களே யன்றி அவிசி முதலிய வேறு நரகங்களும் இருக்கின்றன. நரகங்களில் பாவிகள் வாந்தி செய்து அதில் புரளுகின்றார்கள். தாகம் எடுத்து ஓடுகின்றார்கள். அவர்களை ஓடவிடாது யமதூதர்கள் நாலு பக்கங்களிலும் சூலத்தை யேந்தித் தடுக்கின்றார்கள். தாம் செய்த பாவங்களை நினைந்து அழுகின்றார்கள்.

கொலை புரிந்தோரும் நன்றி கொன்றவரும் பொய் புகன்றவரும் ரௌரவ நரகில் நூறாயிரம் ஆண்டுகள் இருப்பார்கள். பிறகு புழுக்களாகவும் பாம்பு பல்லிகளாகவும் பிறக்கின்றார்கள். புலாலை விரும்பி யுண்டவர்கள் காக்கைகளாகவும் கழுகுகளாகவும் பிறக்கின்றார்கள். கள் குடித்தவர்கள் பன்றிகளாய்ப் பிறக்கின்றார்கள். கோள் சொல்பவர்கள், பிறரை நிந்திப்பவர்கள் கோழிகளாகப் பிறக்கின்றார்கள். பிறர் மனைவியைச் சேருகின்றவர்கள் பெருச்சாளிகளாகப் பிறக்கின்றார்கள். நண்பனைக் கொன்றவனும் நன்றி கெட்டவனும் நரிகளாகவும் ஓநாயாகவும் பிறக்கின்றார்கள். பல பிறப்புக்களை யெடுத்த பின் மனிதப் பிறப்பு எடுக்கின்றார்கள்.

பாவம் மூவகைப்படும். மனம் வாக்கு காயங்களால் செய்யப் படுகின்றன. பொறாமை, ஆசை, பகை, கோபம் இவை மானச பாவங்கள். பொய், கடுஞ்சொல், பிறரை நிந்திப்பது, கோள் கூறுதல், வீண் பேச்சு இவைகள் வாக்கின் பாவங்கள். பிறன்மனை சேர்தல், கொலை, புலாலுண்டல், கள்குடித்தல், பிறரைத் துன்புறுத்துதல் முதலியவை உடம்பின் பாவங்கள். மானசபாவத்தினும் வாக்குப் பாவம் அதிகம்; வாக்குப் பாவத்தினும் உடல் பாவம் அதிகம். தன் பாவங்களை தானே கூறுவதால் பாவங்களின் வலிமை குறையும். தன்னைக் கொல்ல வருபவனைக் கொல்வது பாவமாகாது. அடிக்க ஓங்குபவனை அடிப்பதும் பாவமாகாது.

குடி கொடிய பாவம். குடியர்கள் பல பாவங்களை அறிவின்றிச் செய்வார்கள். குடியர்கட்கு யார் தாய்? யார் மனைவி? என்ற தெளிவு இருக்காது. அவர்கட்கு ஆடை விலகுவதும் தெரியாது. நாணம் இருக்காது. குடியன் பெரியோர்களை வரம்பு மீறிப் பேசுவான். ஆதலால் முதன்மையான பாவம் மதுபானம்

பாவங்களைச் சிறிது சிறிதாக விலக்கவேண்டும். உள்ளத்தில் தீய எண்ணங்களே இல்லாமல் இருப்பது அகத்தூய்மை: நீராடுதல் ஆசமனஞ் செய்தல் புறத்தூய்மை.

காரம் புளிப்பு இவைகள் குறைத்து உண்ணவேண்டும். புலாலுண்ணாமையே பெரும் புண்ணியம், தானம் தவம் யாகம் என்ற எல்லாம் ஒருங்கு சேர்ந்தாலும் புலாலுண்ணாத புண்ணியத்தில் வீசம் பங்குக்கு ஈடாகமாட்டா. தன் உடம்பை வளர்க்கும்பொருட்டு இன்னொரு உடம்பை வதைப்பது மோசமாகும்.

தாய் தந்தை குரு மூத்த சகோதரன் பால் கொடுத்து வளர்த்தவள் இவர்களை நன்கு வணங்கி ஆராதிக்கவேண்டும். இவர்களின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். இவர்களைத் திருப்தி செய்ய வேண்டும். இவர்களுக்கு ஏவல்புரிய வேண்டும்.

உபவாசமும் பிரம்மசர்ய விரதமும் உயர்ந்தவை. ஒரு வேளையுண்பது உபவாசத்துக்கு நிகரானதே. தன் மனைவியுடன் வாழ்பவனும் பிரம்மசாரியே யாவான். சிறந்த தீர்த்தத்தில் முழுகுவது பாவத்தை நீக்கும் வழியாகும். கிழக்கே நோக்கி ஓடும் நதி சிறந்தது. நதிகள் கூடும் இடமும், கடலுடன் நதி கூடும் இடமும் சிறந்தவை.

பாவ நெறியில் வந்த பொருளைத் தானஞ் செய்கின்றவன் நற்பயனை யடையமாட்டான். புண்ணிய நெறியில் ஈட்டிய பொருளை நற்பாத்திரத்தில் செய்கின்ற தானமே மிகவுயர்ந்தது. தானே வலியச் சென்று செய்கின்ற தானம் மேலானது.

காலத்தில் செய்கின்ற நல்வினைகள் அதிக பயன்களை நல்கும். கிரகண காலத்தில் செய்யும் ஜபதபங்கள் அதிக பயன்தரும். தான் செய்த அறங்களை தானே சபையில் புகழ்ந்து கூறுபவன் தான பலனை யடையமாட்டான். பயன்கருதிச் செய்கின்ற தானமும் சிறந்தது ஆகாது.

அன்னம் இடம் விளக்கு தண்ணீர் எள் மருந்து உப்பு விறகு எண்ணெய் இவைகளைத் தானம் தந்தவன் மிகுந்த புண்ணியத்தைப் பெறுகின்றான்.

அன்னதானம் செய்தவர் மேல் உலகில் பரமசுகமாக வசிப்பார்கள். சுவர்ணதானமும் சிறந்தது. இயன்ற அளவு சுவர்ணத்தை

வழங்கவேண்டும். கோதானம் செய்தவன் பசுக்களின் உரோமங்கள் எத்தனை உளவோ அத்தனை ஆண்டுகள் சுவர்க்கத்தில் இன்புறுவான். கோமயத்தையும் கோநீரையும் வெறுக்கக் கூடாது. பசுக்களுக்குப் புல் தருவது சிறந்த புண்ணியமாகும்.

பூமிதானம் சிறந்தது. கன்னிகாதானமும் உயர்ந்தது. எள் தூய்மையானது. எள்ளை யீந்தவன் கொள்ளை புண்ணியத்தைப் பெறுகின்ருன். அன்னதானம் செய்தவன் உடல் வலிமையை அடைவான். ஆடை தந்தவன் அழகைப் பெறுவான். தீபதானஞ் செய்தவன் அறிவைப் பெறுவான். குடைதானஞ் செய்தவன் அரசரால் துயரம் அடையான். வாகனங்களை யீந்தவன் மறுபிறப்பில் உயர்ந்த வாகன வசதிகளுடன் வாழ்வான். இரவில் வந்தவர்க்கு இடந் தந்தவன் துணையுடன் வாழ்வான். குளம் கிணறுகளை வெட்டியவன் தீர்க்காயுளுடன் வாழ்வான். நதிகளில் படிகட்டினவன் துயரம் இன்றி இன்புறுவான். மருந்து கொடுத்தவன் நோயின்றி வாழ்வான். ஒருவன் ஒரு லட்சம் பொருள் உடையவனுக இருந்தான். அவன் ஒரு லட்சம் தானம் செய்தான். மற்ருெருவன் நூறு ரூபாய் மட்டுமே உடையவன். இவன் நூறு ரூபாய் தந்தான். இந்த இருவருக்கும் புண்ணியம் ஒன்ருகத்தான் இருக்கும்.

பரிசுத்தமான இடத்தில் தூபதீப மலர்களைக்கொண்டு தெய்வ பூஜை செய்வதாலும் பாராயணம் செய்வதாலும் நற்கதியைப் பெறுகின்ருர்கள்.

பித்ரு காரியங்கள் சிறந்தவை. இறந்தவர் வேறு பிறப்பை எடுப்பார்கள். பித்ரு கருமங்களால் தென் திசையில் உள்ள பித்ரு தேவதைகள் திருப்தியடைகின்ருர்கள். தேவர்கட்குத் தருவது ஹவ்யம்; பித்ருக்கட்குத் தருவது கவ்யம். ஹவ்யகவ்யம் என்பார்கள்.

தர்மங்களில் பல பிரிவுகள் இருக்கின்றன. பரம்பரையாக வந்தது குலதர்மம்; சாஸ்திர தர்மம்; ஆபத்தர்மம்; மோக்ஷ தர்மம், என்பனவாதி அநேக தர்மங்கள் உள்ளன.

புண்ணியவுலகில் வசிப்பவனுக்கு மூப்பு பசி தாகம் இளைப்பு மலஜலம் வேர்வை முதலிய துன்பங்கள் உண்டாகமாட்டா. புண்ணிய வுலகில் நறுமணமும் கீதநாதங்களும் மணி விளக்கும் இனிய காற்றும் சுகத்தைச் செய்யும்.

இங்கு மனிதர்கள் செய்யும் செயல்களைக் கொண்டே இவர்கள் நற்கதி யடைவார்கள், இவர்கள் நற்கதியடையார்கள் என்று கண்டு கொள்ளலாம்.

தற்கொலை பெரிய பாவத்தைத் தரும். மகாப்பிரஸ்தானம், ப்ராயோபவேசம் முதலியவை தற்கொலையாகா.

மகா பிரஸ்தானம் என்பது, இல்லற வாழ்வில் முறைப்படி வாழ்ந்தவன், தேவகடன் பித்ருகடன் தீர்த்தபின், வாழ்ந்தது போதும் என்ற எண்ணத்துடன், தன தானியங்களை வறியவர்க்கு ஈந்து, உறவினரிடம் இன்சொல் கூறி விடை பெற்றுக்கொண்டு; புத்தாடையுடுத்து, அதைத் தருப்பைக் கயிற்றால் கட்டி உணவின்றி, நிற்காமலும் இருக்காமலும் படுக்காமலும் வடதிசை நோக்கிச் சென்றுகொண்டே உயிரை விடுவது; இப்படி விட்டவன் புண்ணிய உலகம் அடைவான்.

ப்ராயோபவேசம் என்பது முன் சொன்னபடியே செய்த புண்ணியதலத்தில் படுத்து உயிரைவிடுவது. இதே முறைப்படி நீரில் முழுகியும் நெருப்பில் முழுகியும் நற்கதி யடையலாம். ஆவுக்காகவும் அந்தணர்க்காகவும், மற்ற ஏழைகட்காகவும் உயிரைத் தியாகஞ் செய்தவன் மேலான பதவியை யடைவான். படைச் சேவகனாய் நாட்டுக்காகவும், அரசனுக்காகவும் போரில் உயிரை விட்டவன் வீரலோகம் பெறுகின்றான்.

காமம் கோபம் அச்சம் இவற்றால் உயிர்விடுவது தற்கொலையாகும். தற்கொலை செய்து கொண்டவன் முடிவில்லாத நரகத்தை யடைவான்.

இறந்த உடம்பை நீராட்டி பூச்சூட்டி புத்தாடையில் மூடி சந்தனம்பூசி மயானத்தில் எரிக்க வேண்டும். அல்லது புதைக்கவேண்டும். உத்தராயணத்திலும் சுக்கில பட்சத்திலும் பகலிலும் இறப்பது சிறப்பு. மற்றவை இழிவு.

தேவியே! ஞானிகள் மட்டும் பிறவாப் பேற்றினைப் பெறுகின்றார்கள். கடலில் ஒரு கட்டையுடன் மற்றொரு கட்டை சேருவது போன்றதுதான் உறவினரது சேர்க்கை. இந்திரனுக்கும் முடிவுஉண்டு. செல்வத்துக்கு அழிவு முடிவு; பிறப்புக்கு இறப்பு முடிவு; மேன்மைக்குத் தாழ்வு முடிவு. பொருள் படைத்தவனை அரசன் கள்வன் தாயாதி பூதம் முதலியோர் துன்புறுத்துவர். உலகமெல்லாம் அரசு புரியினும் கடலுக்கு அப்பால் உள்ளதை ஆள விரும்புவான். ஆசைக்கு முடிவே கிடையாது. விறகினால் தீ திருப்தியாவதென்பது கிடையாது; அதுபோல் போக பாக்கியங்களை நுகர்வதனால் மூடன் திருப்தி யடைகின்றானில்லை.

அரசன் உலக முழுவதும் ஆளுகின்றான். அவன் ஒரு நகரில் தான் உறைகின்றான். நகரிலும் அவன் குடியிருப்பது ஒரு வீடுதான். வீட்டிலும் ஒரு அறையில் தான் இருக்கின்றான். ஒரு அறையிலும் இரவில் ஒரு படுக்கைதான் இடம். இப்படுக்கையிலும் மனைவிக்குப் பாதி போய்விடுகின்றது. ஆதலால் அரசனுக்கும் சுகம் அற்பந்தான்.

ஆசைதான் அல்லல்கள் அனைத்துக்குங் காரணம். பற்றை அறவே விட்டவனே பரமஞானி.

அறிவில்லாதவனுடைய மனம் என்னும் நிலத்தில் காமம் என்ற ஒரு மரம் உண்டாகின்றது. அதற்கு மோகம் எரு. அறியாமை வேர்; முயற்சி தண்ணீர்; குரோதம் லோபம் கிளைகள்; பாவம் வயிரம், துயரங்கள் மலர்கள். அச்சம் தளிர்; பல எண்ணங்கள் இலைகள். ஆசை யென்பது அதில் படர்கின்ற கொடிகள், ஞானி அறிவு என்னும் வாளினால் இம்மரத்தை வெட்டி வீழ்த்துகின்றான். மூடன் ஆசைக்கு அடிமையாகி சதா நற்சிந்தனையின்றி மறவழியில் பெரும் பொருளை யீட்டிப் பிறர் அநுபவிக்க விட்டுவிட்டு, காட்டில் ஆட்டைப் புலி எடுத்துக் கொண்டு போவது போல் நமனால் கொண்டு போகப் படுகின்றான்.

ஆதலால் ஆசாபாசத்தை அறவே விட்டு ஞானநெறியில் நின்று பிறவித் துயரை யகற்ற வேண்டும்.

பார்வதியே! உலகில் உள்ள எல்லாப் பிராணிகளுந் தூங்கும் காலந் தூங்குவதில்லை. சதா சுழன்று கொண்டே யிருக்கின்றது. சூரியன் பகல் இரவு அளவுப்படியால் மனிதனுடைய வாழ்நாளை யளந்து குறைக்கின்றான். ஆதலால் அறிஞர்கள் நல்லதைச் செய்ய நேரத்தைத் தள்ளிப் போடக் கூடாது. நாளைக்குச் செய்வதை இன்றைக்கே செய்ய வேண்டும்; பிற்பகலில் செய்யத்தக்கதை முற்பகலிலேயே செய்யவேண்டும். நல்லதை விரைந்து செய்யவேண்டும். நாள்தோறும் இறப்பவரை பார்த்துக் கொண்டிருந்தும் நல்லதைச் செய்யாதிருப்பவன் கட்டைக்கும் ஒட்டுக்கும் சமானமானவன். மனைவி மக்கள் வீடு நிலம்புலம் செல்வம் எல்லாவற்றையும் ஒரு நொடியில் விடுத்து மடிகின்றான். போனவன் திரும்பி வருவதில்லை. ஆதலால் இவையெல்லாம் அநித்தியங்கள். அநித்தியத்தை உணர்வது விவேகம். விவேகத்தால் வைராக்கியம் உண்டாகும். வைராக்கியமே முத்தியின் வாயில். ஒழிவை யடைந்து முத்திபெற வேண்டும். இதுதான் மோட்ச தருமம்.

யோகம்

யோக நெறியைக் கூறுகின்றேன்; கேள். குறைந்த வுணவை யுண்டு, ஆசாரத்துடன் இருந்து தனித்த இடத்தில் அமர்ந்து, தருப்பாசனத்தில் அமர்ந்து யோகம் பயிலவேண்டும். உடம்பு, முதுகு, கழுத்து நேராக நிற்கச் செய்து மனதைப் புறத்தே போகவிடாமல் அடக்கி, மூக்கின் நுனியில் பார்வையை வைக்கவேண்டும். மனதை நிறுத்துவதுதான் யோக ரகசியம். முழு முயற்சி செய்து மனதை அடக்க வேண்டும்.

இந்த வுடம்பில் முக்கியமான ஐந்து வாயுக்கள் தொழிற் படுகின்றன; பிராணன் சுவாச வடிவில் சஞ்சரிக்கின்றது. அபானவாயு மலாசயம் மூலம் குதம் ஜாடராக்கினி என்ற இவற்றைச் சார்ந்து மல ஜலங்களைத் தள்ளிக் கொண்டு சஞ்சரிக்கின்றது. உதானவாயு உதிரம் முதலிய தாதுக்களை யெழுப்பிக் கொண்டு மேல் நோக்கிச் செல்லுகின்றது. அதனால் அது உதானன் என்று பேர் பெற்றது. வியானன் என்ற வாயு உடம்பின் பூட்டுக்கள் தோறும் நின்று எல்லாச் செய்கைகளையும் நடத்துகின்றது. சமானன் என்ற வாயு உதிரம் முதலிய ஏழு தாதுக்களிலும் ஜாடராக்கினியிலும் இருந்து உஷ்ணத்தை யெழுப்பி உடம்பெங்கும் பரவச் செய்கின்றது. இதுவே மரண காலத்தில் எல்லாச் செய்கைகளையும் நிறுத்திவிடுகின்றது.

மேலே கூறிய ஐந்து வாயுக்கள் ஒன்றுபடுவதால் உண்டாகும் உஷ்ணத்தை அக்கினி யென்றறிய வேண்டும். அதுதான் பிராணிகளுக்கு உணவை ஜரிக்கச் செய்கின்றது. வியானனும் உதானனும் பிராணுபான வாயுக்களின் இடையில் இருக்கின்றன. ஜாடராக்கினி சமானனேடு சேர்ந்துதான் நன்ருக ஜீரணஞ் செய்கின்றது. உடலின் நடுவில் நாபியுளது; நாபியின் நடுவில் அக்கினியுளது பிராணன் முதலிய வாயுக்கள் அக்கினியில் சேர்ந்திருக்கின்றன. பிராணனிடத்தில் உயிர் இருக்கின்றது. நாபிக்குக் கீழே பக்குவாசயம் இருக்கின்றது; நாபிக்கு மேல் ஆமாசயம் இருக்கின்றது. பஞ்சப் பிராணன்களும் நாபியின் நடுவில் இருக்கின்றன. பிராணன் முதலிய வாயுக்கள் குறுக்கும் மேலும் கீழுமாக உலாவுகின்றன. பிராண வாயுக்களாலும் அக்கினியினுலும் தூண்டப்பட்ட பத்து நரம்புகள் உணவுகளின் சாரங்களை உடம்பில் பரவச் செய்கின்றன.

யோகிகள் இவைகளை நன்கு உணர்ந்து மனதைப் புருவ நடுவில் நிறுத்திப் பழகவேண்டும். பிராண அபான வாயுக்களை ஒன்றுபடுத்திப் பிராணுயாமஞ் செய்யவேண்டும். தியானம் கலைந்தாலும் சோர்வு இன்றி திரும்பவும் திரும்பவும் தியானஞ் செய்யவேண்டும். யோகிகட்கு மனந்தெளியும். தெளிந்த மனதில் ஆத்மஜோதி தெரியும்.

யோகிகட்கு காமம் குரோதம் பயம் தூக்கம் சிநேகம் அதிகவுணவு ஊக்கம் இல்லாமை பிணி சோம்பல் பொருளாசை இந்தப் பத்தும் தடைகளாகும். இத்தடைகளை நீக்கி உறுதியுடன் நின்ற யோகிகட்கு அணிமா மகிமா கரிமா லகிமா பிராப்தி பிராகாம்யம் ஈசித்வம் வசித்வம் என்ற எண்சித்திகளும் உண்டாகி அடிமையாகிப் பணிபுரியும். முத்தியை விரும்பக் கூடாது. அதிகம் புசிப்பவனுக்கும் சிறிதும் புசியாதவனுக்கும், அதிகம் தூங்காதவனுக்கும் சிறிதும் தூங்காதவனுக்கும் யோகம் சித்திக்காது; ஆதலால் மிதபோஜனமும் மித உறக்கமும் உடையவனுய் விளங்கும் யோகிக்கு யோக சமாதி கை

கூடும். யோகியர் முடிவில் ஞான ஒளி பெற்றுப் பிறவாத பெற்றியைப் பெறுகின்றூர்கள் என்று பரமேச்சுரர் பார்வதிக்கு உபதேசித் தருளினுர்.

பாசுபத யோகம்

உமாதேவியார் "முக்கண்ணரே! உமது சாயுஜ்யம் எது? உம்மையடைகின்ற நெறி எது? உமது அடியவர்கள் எதைச் செய்ய வேண்டும்? எதனுல் நீர் மகிழ்ச்சி யடைகின்றீர்? இவற்றை இயம்பும்" என்று கேட்டார்.

பரமேச்சுரர் "தேவியே! என் சாயுஜ்யம் ஆச்சரியமானது. நான் காண்பதற்கும் சிந்திப்பதற்கும் எட்டாதவன். நான் அழிவில்லாதவன்; நான் ஆதியும் அந்தமும் இல்லாதவன். நான் அருள் புரிகின்றவன். நான் பரிசுத்தர்களான நால்வர்கட்குப் பாசுபத யோகத்தை உபதேசித்தேன். அதனை இப்போது உனக்கு உரைக்கின்றேன். நான் பசுக்களுக்குப் பதி; பசுபதியாகிய என்னிடம் பக்தி வைத்து உடம்பெல்லாம் திருநீறு தரித்து விருப்பு வெறுப்பின்றி நிற்பவர்கள் பாசுபதர்கள். திருநீறு தூய்மையையும் மங்கலத்தையும் பாதுகாப்பையும் தரவல்லது. சிவலிங்க வழிபாடு சிறந்தது. யாகம் தானம் முதலிய அனைத்தும் லிங்க வழிபாட்டுக்கு நிகராகமாட்டா. நீரினுலும் பாலினுலும் சிவலிங்கத்தை அபிஷேகம் செய்து பத்திர புஷ்பங்களால் அருச்சிக்கின்றவன் பாவங்களில் இருந்து விடுபடுகின்றுன். ஆயிரங் கோதான பலனையடைகின்றுன். சிவலிங்க வழிபாடு புரிகின்றவன் என் சாயுஜ்யத்தை யடைகின்றுன். மீண்டும் பிறவி எடுக்கமாட்டான்.

அடியார்கள் என்பால் அன்பாய் வில்வம் கொன்றை எருக்கு ஆத்தி முதலிய எனக்கு விருப்பமான பூவும் இலையும் கொண்டு வழிபடுகின்றூர்கள். என்னையும் என் அடியார்களையும் பகைக்கின்றவர்கள் நூற்றுக்கணக்காக யாகங்களைச் செய்தாலும் கொடிய நரகத்திற்குப் போவார்கள். வழிபாட்டினுல் நான் மகிழ்கின்றேன். என்னை வழிபடும் அடியவர்க்கு இந்த உலகில் எல்லாம் கிடைக்கும். இவ்வாறு முழு நீறுபூசி பரமபக்தியுடன் வழிபடுவது பாசுபத யோகமாகும். இதனை நாடோறும் படிப்பவனும் கேட்பவனும் பரகதி பெறுவான்" என்று உபதேசித்தருளினுர்.

பெண்ணறம்

இவ்வாறு பலப்பல அறநெறிகளை உபதேசித்த பரமேச்சுரர் பருவதராஜ குமாரியாகிய பார்வதி தேவியைப் பார்த்துக் கேட்கலானுர்.

"எல்லாந் தெரிந்தவளே! உத்தமியே! உன்னிடம் பெண் தருமத்தைக் கேட்க விரும்புகின்றேன். அதைச் சொல்லவல்லவள் நீதான். திருமாலின் தேவியாகிய திருமகளும், பிரமனது மனைவியாகிய சாவித்திரியும், அறக்கடவுளின் மனைவியாகிய திருதியும், இந்திரனுடைய மனைவியாகிய சசிதேவியும், மார்க்கண்டேயருடைய மனைவியாகிய தூமோர்ணையும், குபேரனுடைய மனைவியாகிய கௌரியும். சூரியனுடைய மனைவியாகிய சுவர்ச்சலையும், அக்கினியின் மனைவியாகிய சுவாகா தேவியும், காசிபரது மனைவியாகிய அதிதியும், வசிஷ்ட பத்தினியாகிய அருந்ததியும், இன்னும் உலகில் புகழ்பெற்ற பதிவிரதைகளும் உன்னை சதா வணங்கி வழிபடுகின்றார்கள். நீ உலகங்கட்குத் தாய். பெண்தான் பெண்ணறத்தைப் பேசவேண்டும். ஆண் சொன்னால் அது சிறப்பு அடையாது. ஆதலால் பெண்ணறத்தை நீ சொல்லவேண்டும்" என்று கேட்டருளினார்.

அம்பிகை அச்சமும் நாணமும் அடைந்து ஒன்றும் பேசாமல் இருந்தார். பரமேச்சுரர் பலமுறை வேண்டினார். அப்போது அம்பிகை இறைவனைத் தொழுது, "எம்பெருமானே! உமக்கு நான் சொல்லுவது முறையாகுமா?" என்று கூறி, அருகில் இருக்கும் கங்கை யமுனை சரஸ்வதி காவேரி நர்மதை கௌதமி கௌசிகி பிரபாசை சிந்து சதத்ரு முதலிய நதிதேவதைகளைப் பார்த்து, "உலகத்தில் உள்ளவர்களின் பாவங்களைப் போக்கிப் புண்ணியத்தை வழங்கும் தீர்த்த தேவதைகளே! வேதமூர்த்தியான பரமேச்சுரருக்குப் பெண்ணறத்தை நான் கூறுவது சரியா?', என்று கேட்டார். நதி தேவதைகள், "மகாதேவீ! உலகம் உய்யும் பொருட்டு உரைத்தருளும்" என்று கூறின.

அம்பிகை பெண்ணறத்தைப் பேசத் தொடங்கினார். அப்போது அமரர்கள் யட்சர்கள் முனிவர்கள் அரம்பையர்கள் முதலிய அனைவரும் கேட்க விரும்பி நாற்புறத்திலும் சூழ்ந்து நின்றார்கள். "காலனைக் கடிந்த நீலகண்ட மூர்த்தியே! மண்ணுலகமும் விண்ணுலகும் பெண்ணுலகத்தால் நிலை பெறுகின்றன. பெண்ணறம் பெருமையுடையது.

ஒரு பெண் இளமையில் தாய் தந்தையரிடம் பாதுகாவலில் இருந்து வளர்ந்து நல்லறிவைப் பெறுதல் வேண்டும். அவள் மங்கைப் பருவம் அடைந்தபின் தந்தை தாய் சகோதரன் அம்மான் தந்தையின் உடன்பிறந்தோன் இந்த ஐவரில் ஒருவர் நல்வரனுக்குத் தானமாகத் தரவேண்டும். கன்னிகை தானே தக்க ஒருவனை விரும்பியடைவதும் உண்டு. இது காந்தர்வ மணம் எனப்படும்.

மணம் எட்டு வகைப்படும். பிராம்மம் பிராஜாபத்யம் ஆரிடம் தெய்வம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் காந்தர்வம் என்பன. இவற்றுள் இராக்கதமும் பைசாசமும் தாழ்ந்தவை.

கன்னிகையை நன்கு ஆராய்ந்து பார்த்துத் தரவேண்டும். அவ்வாறு திருமணஞ் செய்துகொண்ட பெண்மணிக்குக் கணவன்தான் கடவுள். கணவனுடைய கருத்தறிந்து ஒழுகவேண்டும். கணவனுக்கு இன்னாதனை ஒருபோதும் செய்யக் கூடாது. கணவன் விரும்பியதை அன்புடன் செய்யவேண்டும். கணவன் தீயவனாயிருப்பினும் மனைவி அன்புடன் அவனை உபசரிக்க வேண்டும்.

ஒரு அந்தணனுக்கு இரு மனைவியர்கள் இருந்தார்கள். ஒருத்தி கணவனை அவமதித்து தெய்வ பூஜைகளை அதிக அன்புடன் எப்போதும் செய்து கொண்டிருந்தாள். மற்றொருத்தி கணவனையே தெய்வமாக மதித்து சதா அவன் விருப்பத்தைச் செய்து கொண்டிருந்தாள். அந்த இருவரும் ஒரு காலத்தில் மரணம் அடைந்தார்கள். அவ்விருவரும் பரலோகத்தின் வழியில் சென்றார்கள். கணவனை வழிபட்டவள் புண்ணிய வுலகஞ் சென்றாள். தேவபூசை செய்தவள் வழியில் நின்றாள். அவளுக்குப் புண்ணிய உலகின் கதவு திறக்கப்படவில்லை. வழியில் நின்று அழுது கொண்டிருந்தாள். அங்கே அறக்கடவுள் தோன்றி, "குற்றமற்றவளே! அழாதே. நீ உன் தருமத்தைச் செய்யவில்லை; பெண்ணுக்குக் கணவனே தெய்வம்! நீ கணவனை அவமதித்தனை. அம்மா! அதனால் உனக்கு நற்கதியில்லை. நீ சென்று உன் கணவனுக்கு அனுகூலத்தைச் செய். உனக்குப் புண்ணிய பதவி கிடைக்கும்" என்று சொன்னார். அவள் அந்த அறவுரைகளைக் கேட்டுத் திரும்பிவந்து கணவனைப் பணிந்து கருத்துக்கு இனியவைகளைச் செய்து நற்கதி பெற்றாள். ஆதலால் பெண்கள் கணவனை வழிபடுவதே சிறந்த அறம்.

ஒரு பெண் கணவனுக்கு முன் எழுந்திருக்க வேண்டும். காலையில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். கணவன் எழுந்தபின் அவனுக்கு ஆகவேண்டிய அனைத்துஞ் செய்ய வேண்டும். கணவனுக்கு விருப்பமான வுணவினைக் கணவனைக் கேட்டுத் தயாரிக்கவேண்டும். உடம்புக்கு ஊறுசெய்யாத உணவுகளைச் சுசி ருசியாகச் செய்து தன் கையால் படைக்க வேண்டும்.

வெளியில் இருந்து வந்த கணவனுக்கு காலலம்ப நீர்தந்து தாக சாந்தி செய்து உபசரிக்க வேண்டும். கணவன் வெளியிலே சென்ற போது தன் காரியங்களை எச்சரிக்கையாகக் கவனிக்கவேண்டும். விருந்தினர்கள் வரும்போது மலர்ந்த முகத்துடன் இன்னுரை கூறி உணவு தந்து மகிழ்விக்க வேண்டும். வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டில் தானியம் முதலியவற்றைச் சிந்தாமல் பாதுகாக்க வேண்டும். கணவன் மனம் நோவாமல் ஒழுகவேண்டும். புன்சிரிப்புடன் அகமும் முகமும் மலர்ந்து கணவனை மருவுதல் வேண்டும். கணவனிடங் கடுஞ்சொற்களை உபயோகிக்கக் கூடாது. வேலைக்

காரர்கட்கும் வேலைக்காரிகட்கும் ஏழைகட்கும் பசுக்களுக்கும் உணவு தருதல் வேண்டும். கணவன் கோபித்தாலும் தான் கோபித்தும் எதிர்த்தும் வசனிக்கக் கூடாது. கணவன் ஆற்றல் அற்றவனுகவும் வறியவனுகவும் இருப்பினும் அன்புடன் உபசரிக்க வேண்டும். கணவனுக்கு எது மகிழ்ச்சியைத் தருமோ அதை அன்புடன் செய்ய வேண்டும். இரகசியங்களை வெளியிடாமல் இருக்க வேண்டும். அறம் பொருள் இன்பம் என்ற மூன்றிலும் கணவனை அநுசரித்து நடக்க வேண்டும். வெளியில் பார்ப்பது, கலகஞ் செய்வது, கோள் சொல்வது, மிகுதியாகப் புசிப்பது, பகலில் தூங்குவது முதலியவற்றை விட்டுவிட வேண்டும். கற்புள்ளவள் பிள்ளைகளோடுங்கூட தனிமையாக இருக்கக் கூடாது. கணவன் வைத்து வைக்கும்படி கொடுத்ததைக் காப்பாற்றி வைக்கவேண்டும், கணவன் தந்தது அற்பமாயினும் அதைப் பெரிதாக மதித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். "அது வேண்டும் இது வேண்டும்" என்று கணவனிடம் கேட்டுத் தொல்லை தரக்கூடாது. தாய் தன் குழந்தையைக் காப்பதுபோல் கற்புள்ளவள் கணவனைக் காக்கவேண்டும். கணவனுக்குக் கட்டளையிடக் கூடாது. பிறருடைய செல்வத்தைக் கண்டு பெருமூச்சுவிடக் கூடாது. தன் கையால் படுக்கை விரித்து, கணவன் உறங்கிய பின் உறங்க வேண்டும். இவ்வாறு பெண் தருமத்தைச் சுருக்கமாகச் சொன்னேன்.

"பெருமானே! எவள் தன் சுகத்திலும் செல்வத்திலும் அதிகம் விருப்பம் இன்றி இருக்கின்ருளோ அவள்தான் பெண்களுள் பதிவிரதை. பெண்களுக்குக் கண்கண்ட கடவுள் கணவன்தான். கணவனே சுற்றம்; கணவனே தஞ்சம், கணவன் வருந்திச் செய்யும் தவம் வேள்வி யாத்திரை பூசை விரதம் உபவாசம் ஆகிய பயன்களைப் பெண் பதியின் பணிவிடையால் எளிதில் பெறுகின்ருள். இதனல் பிறவிகளுள் பெண் பிறப்பே சிறந்தது. பெண் பதிபக்தியால் எல்லா நலன்களும் அடைகின்ருள். எல்லா சுகங்களையும் அடைகின்ருள். பெண்ணுக்கு தவம் தானம் தாழ்வு சுகம் எல்லாம் கணவன்தான். பதிவிரதைகளைக் கண்டு கனலும் புனலும் அஞ்சுகின்றன. கணவன் மூடனுக இருந்தாலும், அழகற்றவனுக இருந்தாலும், வறியவனுக இருந்தாலும் அவனை மதித்து ஒழுகுகின்றவள் புண்ணிய வுலகம் புகுகின்ருள்.

கணவன் இறப்பானுயின் அவனுடன் அநுமரணஞ் செய்தாவது, அல்லது கைம்பெண் விரதத்தை மேற்கொண்டாவது வாழ வேண்டும்.

சில பெண்கள் இந்நெறியை நழுவவிட்டு, மதிகெட்டுத் திரிகின்ருர்கள். பேச்சுக்கு முன் அழுது கொண்டும், காரணமில்லாமல் சிரித்

துக்கொண்டும், கலகஞ் செய்து கொண்டும், ஆடம்பரமான உடைகளை உடுத்துக் கொண்டும், பிறருடைய வாழ்வைக் கண்டு பொருமையடைந்தும், கோபத்தால் படபட என்று பேசியும், ஆன்ருேர்களை வணங்காமலும் வாழ்கின்ருர்கள். ஆகாரமின்றியும். நாணம் இன்றியும், சதா தூங்கிக் கொண்டும், கணவனுடன் போர் தொடுத்துக் கொண்டும் இருக்கின்ற பெண்கள் பேய்க்கு நிகரானவர்கள். இவர்கள் நரகில் வீழ்ந்து நலிவார்கள். பரபுருடனை உறவு கொள்பவள் குலத்தையுங் கெடுத்து நூருயிரம் ஆண்டுகள் நரகில் துன்புறுவாள்.

ஆதலால் மாதர்கள் பதிவிரதைகளாக ஒழுகி நன்மக்களைப் பெற்று நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம் புரியவேண்டும்'' என்று கூறி நாணத்துடன் நின்ருர். சிவமூர்த்தி உமாதேவியைப் பாராட்டினுர், அங்குள்ள அமரர்களும் அரம்பையர்களும் ஆனந்தமேலிட்டு அம்பிகையை அடிபணிந்து கொண்டாடினுர்கள்.

சிவபெருமான், ''பார்வதி! நம்முடைய இந்த உரையாடல் உத்தமமானது; பாவத்தைப் போக்குவது. இப்புனிதமான வாக்கியங்களைப் படிப்பவனும், சொல்லுபவனும், கேட்பவனும் செல்வமும் நீண்ட ஆயுளும் பெறுவார்கள். நற்கதியடைவார்கள்'' என்று கூறினுர்.

விஷ்ணு மகிமை

முனிவர்கள் முக்கண்ணரை வணங்கி ''மகாதேவரே! விஷ்ணுவின் பெருமையை நாங்கள் கேட்க விரும்புகின்ருேம்'' என்ருர்கள். சிவமூர்த்தி சொல்லத் தொடங்கினுர்.

''விஷ்ணு நித்தியர்; பொன் போலும் உதய சூரியன் போலும் ஒளி செய்கின்றவர்; பேராற்றல் படைத்தவர்; ஸ்ரீவத்சம் என்ற மச்ச அடையாளம் உடையவர்; சங்கு சக்கரம் தண்டு வாள் வில் என்ற பஞ்சாயுதபாணி; அவர் உலகங்கட்கு நாதர்; எங்கும் நிறைந்தவர்; ஆயிரம் கண்கள் உடையவர்; என்றும் உள்ளவர்; எல்லாம் அறிந்தவர்; அசுரர்களை யழித்து அமரர்கட்கு இதத்தைச் செய்பவர்; கருடக் கொடியினர்; அச்சத்தை யகற்றுபவர்; ஆனந்தத்தை யருளுபவர்; யதுகுலத்தில் பிறந்து பூபாரந் தீர்ப்பார். நீதி நிறைந்தவர்; நிலையானவர். இன்னுந் திருமாலின் பெருமை அளவிட முடியாதவை'' என்று கூறினுர்'' என்று நாரத முனிவர் கண்ணபிரானிடம் கூறினுர்.

மாதவர்கள் அனைவரும் மதுசூதனரைப் புகழ்ந்து போற்றினுர்கள். கண்ணபிரான் சிவபூசை செய்து திரும்பி தன் நகரத்தையடைந்தார். அவருடைய தவவலிமையால் ருக்குமணியிடம் பிரத்யும்னர் பிறந்தார். இவர் மன்மதனுடைய அம்சம்.

தருமநந்தனு! இந்தத் திரிவிக்கிரமரான கிருஷ்ணரை நீங்கள் அடுத்திருக்கின்றீர்கள். இந்தப் பகவான் எங்கிருக்கின்ருரோ அங்கு புகழும் செல்வமும் மகிழ்ச்சியும் முத்திக்கு உபாயமும் இருக்கின்றன. இந்திரன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும் இவர்தாம், இதில் ஐயம் இல்லை. எல்லா வுயிர்கட்கும் இவர்தாம் ஆதாரம்; ஆதியும் அந்தமும் இல்லாதவர். அறிவுக்கு எட்டாதவர்; இவர் உலகத்தை உய்விக்க அவதரித்தார். உன்னுடைய வெற்றிக்கும் புகழுக்கும் காரணம் இவருடைய கருணைதான். இப்பெருமானையும் அர்ச்சுனனையும் பகைத்து மூடனுகிய துரியோதனன் தன் சுற்றத் துடன் அழிந்தான்.

தருமபுத்திரனே! நீ கவலையைவிட்டு உலகை ஆட்சி செய்வா யாக" என்று பீஷ்மாசாரியர் கூறினுர்.

தருமர் பிதாமகரைப் பார்த்து விஷ்ணுவின் பெருமையை மேலுங் கூறுமாறு கேட்டார். பீஷ்மர் விஷ்ணு சகஸ்ரநாமங்களைக் கூறினுர். சிறந்த மகரிஷிகளின் பேர்களையும் கூறினுர். கார்த்தவீரியனுடைய வரலாற்றையும் அந்தணர்களது மகிமையையும் கூறினுர்.

சிவமகிமை

தருமர் கண்ணபிரானைப் பார்த்து சிவ மகிமையைக் கூறுமாறு கேட்டார். கண்ணபிரான் தட்சயக்ஞத்தையும் அதில் சங்கரர் செய்த தேவ தண்டனையையும் கூறினுர். "யுதிஷ்டிரரே! சிவமூர்த்தி அளவற்ற ஆற்றல் படைத்தவர்; ஏகாட்சர்; திரியம்பகர், இரக்க முள்ளவர்" என்று சிவ மகிமையைக் கூறினுர்.

தருமர் பிதாமகரே! தங்களிடமிருந்து அநேக அறங்களைக் கேட் டேன். இவற்றை உம்மையன்றி உரைக்கவல்லார் யாவர். நாங்கள் தவஞ்செய்தவர்கள்" என்று கூறினுர்.

இவ்வாறு பீஷ்மர் தருமங்களைக் கூறியபின் தியானஞ் செய்வதற் காக ஓய்வு பெற்ருர். சிறிது நேரம் அம்மகாசபை மௌனமாக இருந்தது.

வியாசர் "பீஷ்மரே! நீர் தருமன் முதலியோரை நகரத்துக்குப் போகுமாறு கட்டளையிட்டனுப்பும்" என்ருர்.

விடைகொடுத்தல்

பீஷ்மர், "குந்திமைந்தனே! நீ நகரத்துக்குச் செல். மனதில் தருமத்தை நினை. தட்சிணைகளுடன் கூடிய யாகங்களைச் செய். யயாதியைப் போல் ஊக்கத்துடன் ஐம்புலன்களையடக்கி அரச நெறி

யில் நின்று பித்ருக்களையுந் தேவர்களையும் மகிழச் செய். துயரத்தை விடுத்து குடிகளைக் காப்பாற்று. நண்பர்களுக்கு நலஞ்செய். பழுத்த மரத்தைப் பறவைகள் அடுத்து வாழ்வதைப்போல் மக்கள் உன்னையடுத்து வாழ்வார்களாக; உத்தராயணம் வந்தபின் வருக" என்று இனிய சொற்களைச் சொல்லி விடை கொடுத்தார்.

தருமர், திருதராட்டிரன், பதிவிரதையான காந்தாரி, கிருஷ்ணர், உடன்பிறந்தார்கள், முனிவர்கள் முதலியவர்களுடன் அத்தினபுரஞ் சேர்ந்தார். பின்னர் பட்டினத்து மக்களுக்கும் தேசத்து மக்களுக்கும் தக்க மரியாதைகள் செய்து அனுப்பினர். போரில் புத்திரர் களையும் கணவர்களையும் இழந்த பெண்களுக்கு நிரம்பப் பொன் தந்து ஆறுதல் கூறினர். பட்டாபிஷேகம் செய்து கொண்ட தரும புத்திரர் அரசு புரிந்தார்.

பீஷ்மர் கூறிய உத்தராயணம் வந்தவுடன் நெய், மலர்மாலை பட்டாடைகள், நறுமணப் பொருள்கள் சந்தன அகிற்கட்டைகள் முதலிய பொருள்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். திருதராட்டிரன், விதுரர், காந்தாரி, குந்தி, யுயுத்சு, கிருஷ்ணர் முதலிய அனைவரும் அவருடன் சென்றார்கள்.

குருக்ஷேத்திரம் போய் பீஷ்மரை வணங்கி "பாட்டனரே! அடியேன் யுதிஷ்டிரன் வந்திருக்கின்றேன். அடியேன் என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடும்" என்றார்.

பீஷ்மர் கண்விழித்து எல்லோரையும் பார்த்தார். பெரிய ஒலியுடன் பேசலானர். "தருமநந்தன! நீங்கள் எல்லோரும் வந்தது பற்றி மகிழ்ச்சி. ஆதித்த பகவான் வடதிசைக்குத் திரும்பிவிட்டார். நான் படுத்து இன்றோடு ஐம்பத்தெட்டு நாட்கள் கடந்தன. கூரிய அம்புகளின் மேல் படுத்திருப்பதனல் இவை நூறு ஆண்டுகள்போல் இருக்கின்றன. இன்று மாசி மாதம் சுக்லபட்சத்து அஷ்டமி திதி. என் வாழ்க்கை முடிந்துவிட்டது" என்றார்.

பீஷ்மர் திருதராட்டிரனை அழைத்துக் கூறுவாராயினர். "மகனே! நீ தருமந் தெரிந்தவன். நுட்பமான சாத்திரங்களையும். ஆறு அங்கங்களுடன் கூடிய நான்கு வேதங்களையும் அறிந்தவன். வருந்தற்க. நடக்கவேண்டியது நடந்துவிட்டது. பாண்டவர்கள் பாண்டுக்கு எப்படியோ அப்படியே உனக்கும் புத்திரர்கள். பெரியோர்களுக்குப் பணிவிடை புரிவதில் ஊக்கமுள்ள இவர்களிடம் நீ அன்பாயிரு. இவர்களை ஆதரிப்பாயாக. யுதிஷ்டிரன் உத்தமன், உன் ஏவலையும் ஆவலையும் நிறைவேற்றுவான். உன் மைந்தர்கள் தீயவர்கள், கோபமும் பொறாமையும் ஆசையும் உடையவர்கள்; அவர்களின் அழிவுக்காக நீ வருந்தாதே" என்றார்.

கண்ணபிரானைப் பார்த்துக் கூறுவாரானார். "வைகுண்ட பதியே! தயாநிதியே! உமக்கு வணக்கம். உமது திருவடியில் அன்புள்ள எனக்கு அருள் செய்யும், கெடுமதியுள்ள துரியோதனனுக்கு, "எங்கே கிருஷ்ணர் இருக்கின்றாரோ அங்கே தருமம் இருக்கும்; எங்கே தருமம் இருக்குமோ அங்கே ஜெயம் இருக்கும்" என்று கூறினேன். பாண்டவர்களுடன் நட்புகொள் என்று பலமுறை பகர்ந்தேன். அவன் என் அறவுரையைக் கேளாது, தமருடன் அழிந்தான். பதரிகாச்சிரமத்தில் வெகுகாலந் தவஞ்செய்த நரநாராயணர்கள் அருச்சுனனும் நீரும் என்று நாரதர் கூறக்கேட்டு அறிந்தேன். ஐயனே! அடியேன் இந்த உடம்பை விடப் போகின்றேன். எனக்கு விடைகொடும்; உமது அருளால் உயர்கதியடைவேன்" என்றார்.

வாசுதேவர் "அரசரிஷியே. உமக்கு அனுமதி கொடுத்தேன். நீர் வசுக்களின் பதவியைப் பெறுவீராக. உமக்குப் பாவம் ஒன்றுமில்லை. நீர் இரண்டாவது மார்க்கண்டேயரைப்போல் பிதாவிடம் பக்தி வைத்தீர். அதனால் இயமன் உமது சேவகன்போல் வணங்கி உமக்குக் கட்டுப்பட்டிருக்கின்றான்" என்றார்.

பீஷ்மர், பாண்டவர்கள் திருதராட்டிரன் முதலிய எல்லோரையும் பார்த்து, "நான் உயிரை விடப்போகின்றேன். நீங்கள் சத்தியத்தை விடாமல்இருங்கள்; சத்தியமே நித்தியம்." என்று கூறிவிட்டு, யாசிப்பவர்க்குப் பொற் குவியல்களை வழங்கினார்.

பீஷ்மர் முத்தி

சிறிதுநேரம் பீஷ்மர் மௌனமாக இருந்தார். மனத்தை யோகத்தில் நிலைநிறுத்தினார். அடக்கப்பட்ட மூச்சு மேல் நோக்கிச் சென்றது. அதைக்கண்டு அனைவரும் அதிசயம் அடைந்தார்கள். எந்த எந்த அங்கங்களை முறையே விட்டாரோ அந்த அந்த அங்கங்களில் அம்புகள் இல்லாமல் மறைந்தன. அவர்கள் பார்த்திருக்கும்போதே ஒரு நொடியில் அம்புகள் அனைத்தும் மறைந்துவிட்டன. பீஷ்மருடைய ஆத்மஜோதி சிரத்தைப் பிளந்துகொண்டு விண்ணை நோக்கிச் சென்றது. தேவதுந்துபி முழங்கிற்று! பூமாரி அவர்மீது வீழ்ந்தது சித்தர்களும், முனிவர்களும் மகிழ்ந்து "நல்லது" "நல்லது" என்று சொன்னார்கள். ஒளிப்பிழம்பாகப் பீஷ்மர் தமது வசுபதம் போய்ச் சேர்ந்தார்.

பாண்டவர்களும் விதுரரும் யுயுத்சுவும் சந்தனக்கட்டைகளை யடுக்கினார்கள். எல்லோரும் அழுதுகொண்டு சந்தனமும் பட்டும் மலர் மாலையுங் கொண்டு அவருடைய திருமேனியை மூடினார்கள்.

யுயுத்சு அவருக்கு உயர்ந்த குடைபிடித்தான். பீமனும் அர்ச்சுனனும் வெண்சாமரை வீசினார்கள். நகுலசகதேவர்கள் கிரீடம் வைத்தார்கள், திருதராட்டிரனும் யுதிஷ்டிரரும் பாதத்தின் அருகில் இருந்தார்கள்—வயது முதிர்ந்த கௌரவப் பெண்கள் நாலுபக்கங்களிலும் விசிறி எடுத்து வீசினார்கள். ஓமஞ் செய்தார்கள்; ஸாமம் பாடினார்கள். சிதையில் வைத்து தீ மூட்டினார்கள். வலம் இடமாக வலம் வந்தார்கள். பிறகு எல்லோரும் கங்கைக்குச் சென்று நீர்க்கடன்களைச் செய்தார்கள்.

கங்காதேவி அங்கு தோன்றி துயரந் தாங்காது புலம்பியழுதாள். "அரசர்களே! என் இதயம் இரும்பினால் செய்யப்பட்டது போலும். என் அன்புள்ள மைந்தன் மறைந்தபின் இதயம் வெடிக்காமல் இருக்கின்றதே. காசிமாநகரில் எல்லா அரசர்களையும் என்மகன் ஒரு தேரில் நின்று போரில் வென்று கன்னிகையைக் கொணர்ந்து தம்பிக்குத்திருமணஞ்செய்து வைத்தான். இவனுக்கு நிகரான வீரன் எந்த உலகிலும் இல்லை. இவன் சிகண்டியால் கொல்லப்பட்டதையறிந்து வேதனை யடைகின்றேன். உலகம் அனைத்தையும் வென்ற பரசுராமரை எளிதில் வென்றவன்; என் அருமைமகனை யிழந்தேன்" என்று கூறியழுதாள்.

வாசுதேவர் "அம்மா! கங்கா தேவியே கலக்கமடையாதே! உன் மகன் உயர்ந்த பதவியை யடைந்தார். அவர் எட்டாவது வஸு. சாபத்தால் மனிதனாகப் பிறந்தார். வந்த வேலை முடிந்துவிட்டது. தன் பதத்தைப் பெற்றார். அவரைச் சிகண்டி கொல்லவில்லை. அவருக்கு முடிவு அருச்சுனனால் எய்தியது. உன் மகனாக வந்த புருஷப் புலியை இந்திரனாலும் வெல்ல வொண்ணாது. அவர் தானே சுவர்க்கஞ் சென்றார். அவரைப்பற்றி நீ அல்லல்பட வேண்டாம்" என்று இனிமையாக இயம்பினார்.

கங்கை கண்ணனுடைய கனிமதுரமான மொழிகளைக் கேட்டு துயரம் நீங்கி நீரில் மறைந்தாள். எல்லோரும் அத்தினபுரஞ் சேர்ந்தார்கள்.

அநுசாஸன பர்வம் முற்றிற்று.

காகுத்தன்—காந்தமாமணி

உயிரைத் துரும்பாக நினைத்து, இரும்பின் ஆயுதங்கள் மார்பில் தைக்க, அஞ்சாது அரும்போர் புரிந்த வீரர்கள் பலர் இருந்தனர். நாட்டுக்காகவும், நல்லறத்துக்காகவும் அறப்போர் புரிந்தார்கள். மார்பில் விழுப்புண் பெற்றார்கள். அப்புண்கள் அவர்கட்கு அழகு செய்தன.

பகைவர்கள் விடுத்த பாணங்கள் வீரர்கள் மார்பில் தைத்து ஒடிந்துவிடும். ஒடிந்த இரும்புத் துண்டுகள் உடம்புக்குள் நின்று விடும். போர் முடிந்தபின் ஒடிந்த இரும்புத் துண்டுகளை எப்படி எடுப்பது? இரும்பை இழுக்குங் காந்தத்தை வைத்தால் உடம்புக்குள் நின்ற இரும்புத் துண்டை அக்காந்தக் கல் துன்பம் இன்றி இழுத்து விடும். இது அந்தக் காலத்து சிகிச்சை முறை. அன்றி சஞ்சீவி மருந்தில் நான்கு வகையுண்டு.

1. மாண்டாரை உய்விக்கும் தன்மையுடையது.
—மிருத சஞ்சீவி

2. அற்ற உடல் உறுப்புக்களை ஒட்டுவிப்பது.
—சந்தான கரணி.

3. உடம்புக்குள் உள்ள ஆயுதங்களை வெளிப்படுத்துவது.
—சல்லிய கரணி.

4. முற்றும் அழிந்தபின் பழைய உருவையே தருவது.
—சமனி கரணி.

இந்த நான்கு வகையான சஞ்சீவிகளைப்பற்றி சாம்பவந்தன் கூறும் பாடலைக் காண்க.

சல்லியம் அகற்றுவ தொன்று; சந்துகள்
புல்லுறப் பொருத்துவ தொனறு; போயின
நல்லுயிர் நல்குவ தொன்று; நன்னிறம்
தொல்லைய தாக்குவ தொன்று; தொல்லையோய்.

இந்த நான்கு மருந்துகளும் அடங்கிய சஞ்சீவி மலையைப் பெயர்த்துக்கொணர்ந்து, அநுமார் போரில் இந்திரஜித்விடுத்த பிரமாத்திரத்தால் மாண்ட இலக்குவன் முதலிய அனைவரையும் பிழைத்தெழுமாறு செய்தருளினர்.

அயோத்தியிலே கைகேயி கேட்ட வரம் என்ற அரம் தயரதருடைய மார்பில் பட்டு ஒடிந்து புண்ணாக்கியது. அவர் உயிர் துறந்தார். இந்தப் பருவுடலாகிய தூயவுடம்பு நீங்கப் பெற்று நுண்ணு

டம்பாகிய சூட்சும உடம்புடன் சுவர்க்கஞ் சென்ருர். ஆனுல் கூரிய பாணம் அந்த நுண்ணுடம்பில் நின்று தயரதச் சக்கரவர்த்தியை வேதனைப்படுத்திக் கொண்டேயிருந்தது.

காலிலே தைத்த முள் ஒடிந்து உள் நின்றுவிட்டால் வீங்கி சீழ் பிடித்துப் பெருந்துன்பத்தைச் செய்கின்றது.

மார்பில் தைத்த பாணம் உள்ளேயே பதினுன்கு ஆண்டுகள் நின்றிருந்தால் அது எத்துணைத் துன்பஞ் செய்திருக்கும்? உண்மையைக் காக்க உயிர் கொடுத்த உத்தம வேந்தர் தயரதர் இன்பத்தையே நுகரும் புண்ணிய வுலகிலே, வரமாகிய அம்பு உள் நின்று பெருந்துயரத்தைச் செய்தது,

இராவண வதம் முடிந்தபின் விபீஷணருக்கு முடிசூட்டு விழா நிகழ்ந்தது. சீதாதேவி தழலில் முழுகி, நெருப்பையும் சுட்டு ஒளி விளங்க ஒப்பில்லாத கற்புக்கரசியாகக் காட்சியளித்தாள்.

அப்போது பிரமாதி தேவர்கள் அனைவரும் அங்கே வந்து, இராகவனைப் புகழ்ந்து போற்றி செய்தார்கள். விண்ணுலகிலே நுண்ணுடம்புடன் வாழ்கின்ற தசரதச் சக்கரவர்த்தி விமானம் ஊர்ந்து தன் திருமைந்தனைக் காண வந்தார்.

உருத்திரமூர்த்தி, "இராகவா! இதோ உன் தந்தையார் உன்னைக் காண வருகின்ருர்" என்று கூறினுர்.

இராமர் மிகுந்த மகிழ்ச்சியுடன் தந்தையாருடைய தாள்மலர் மீது சென்னிதோய வீழ்ந்து வணங்கினுர்.

ஆதியான்பணி அருள்பெற்ற அரசருக்கரசன்
காதல் மைந்தனைக் காணிய உவந்ததோர் கருத்தால்
பூதலத்திடைப் புக்கனன்; புகுதலும் பொருவில்
வேத வேந்தனும் அவன்மலர்த்தாள்மிசை வீழ்ந்தான்.

தயரதர் பதினுன்கு ஆண்டுகட்குப் பின் கண்ணுரக் காதல் மைந்தனைத் தவக்கோலத்துடன் கண்டார். அவர் பழைய ராமரா! இல்லை. வெள்ளிமலையைத் துள்ளியெடுத்த வீராதி வீரனுகிய இராவணனை இராவணஞ் செய்து, ஈராயிரம் வெள்ளம் அரக்கரைக் கொன்று வென்ற வீரராகவர். அந்த வீரராமரை கொடுத்துக் கொடுத்து நீண்டகரமலரால் எடுத்து, மலையன்ன மார்பில் தழுவிக் கொண்டார். ஆனந்தக் கண்ணீரால் அபிஷேகஞ் செய்தார். உடலும் உள்ளமும் உணர்வும் உவந்து, தன் உடம்பில் இருந்த துன்பம் விலகியது. மகனைப் பார்த்துக் கூறுகின்ருர்.

வீழ்ந்த மைந்தனை எடுத்துத்தன் விலங்கலாகத்தின்
ஆழ்ந் தெழுந்திடத் தழுவித்தன் கண்ணில்நீராட்டி
வாழ்ந்த சிந்தையின் மனங்களும் களிப்புறமன்னன்
போழ்ந்த துன்பங்கள் புறப்பட நின்றிவைபுகன்முன்.

தயரதர் தன்மகனை மார்பில் அணைத்துத் தழுவியதனுல் கைகேயி யின் வரம் என்ற கூர்வேல் உள்ளத்திலிருந்து துன்புறுத்திக் கொண் டிருந்ததன்றோ? உடம்புக்குள் தைத்து ஒடிந்த இரும்பு ஆயுதங்களை இழுத்து உதவுவது காந்தக்கல் என்று முன்னே கூறினோமல்லவா? இராமர் காந்தமாமணி. ஆதலால் தந்தையின் உடம்புக்குள் தைத்து உறுதுயரம் செய்து கொண்டிருந்த கூரிய அம்பை ஈர்த்து வெளிப்படுத்திவிட்டார். என்ன அற்புதம்?

தயரதர் "மகனே! உன் திருப்பெயர் வாழி. சாந்தமாமணியான நீ காந்தமாமணியாகவும் விளங்குகின்றாய். அன்று கைகேயி என் னிடம் பெற்ற வரம் என்ற கூரியவேல் என் இதயத்தில் பாய்ந்து இது வரை இடர்ப்படுத்திக் கொண்டிருந்தது. என்னைக் கொன்றும் அது என் நெஞ்சைவிட்டு நீங்கிற்றில்லை. ஆனுல் உன் திருமார்பாகிய காந்தமாமணி அக்கூர்வேலை இப்போது இழுத்து அகற்றியது. நான் துன்பத்தினின்றும் நீங்கினேன்.

அன்று கேகயன்மகள் கொண்டவரமெனும் அயில்வேல்
இன்று காறும்என் இதயத்தின் இடைநின்றது என்னைக்
கொன்றும் நீங்கலது; இப்பொழு தகன்றதுன்குலப்பூண்
மன்றல் ஆகமாம் காந்தமாமணியின்று வாங்க.

(இராமருடைய திருமேனி இத்துணைச் சிறப்புடையது)

மாதவத்தால் நான் பெற்ற மாணிக்கமே! உத்தமமான புத்திரர் களைப் பெற்று உயர்ந்து உலகில் ஓங்கியுள்ள அனைவரும் என் பாதத் துகளுக்கும் ஒப்பாகமாட்டார் என்று சொல்லும்படி என்னைப் பெரு மைப்படுத்திவிட்டாய். அதனுல் பிரமனுலகவாழ்வும் பெரும் புகழும் பெற்று நான் உயர்ந்திருக்கின்றேன்.

மைந்தரைப் பெற்று வானுயர் தோற்றத்து மலர்த்தார்
சுந்தரப் பெருந் தோளினுய்! என்துணைத்தாளின்
பைந்துகட்களும் ஒக்கிலராம் எனப்படைத்தாய்
உய்ந்தவர்க்குறுந் துறக்கமும் புகழும்பெற் றுயர்ந்தேன்.

அழகிய தோள்களையுடைய மகனே! இதோ! இங்கே பார்! முன்னே நான் பலகாலும் பணிந்த தேவர்களும் முனிவர் யாவர் களும், என்னை அடிக்கடி கண்டு கண்டு கைகுவித்து வணங்குகின்முர்.

இந்தக் காட்சியைக் காண்பாயாக. இத்துணைச் சிறப்பும் உன்னை மகனுகப் பெற்றதனுல் எனக்கு எளிதில் கிடைத்தது. அண்டமூல ராகிய பிரமயோகத்தில் பிரமதேவருடன் ஒக்க ஓராசனத்திருந்து பிரமானந்தம் அநுபவிக்கும்படிச் செய்தனையே!

பண்டு நான்தொழும் தேவரும் முனிவரும் பாராய்
கண்டுகண் டெனைக் கைத்தலங் குவிக்கின்ற காட்சி
புண்டரீகத்துப் புராதனன் தன்னெடும் பொருந்தி
அண்டமூலத்தொ ராசனத் திருத்தினை அழக.

இவ்வாறு களிதுளும்பிக் கழறினுர் தயரத வேந்தர். கூறியபின் சீதாபிராட்டியார் பக்கஞ் சென்ருர். அப்பிராட்டி மாமனுரை வணங்கினுள்.

தயரதர், திருமகளாகிய மருமகளைப் பார்த்து "அம்மா! நீ வருந்தற்க. உன்னை நெருப்பில் புகுமாறு என் மகன் செய்தானே என்று நீ எண்ணுதே. செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய காலத்தில் தான் செய்ய வேண்டும். பொன்னை நெருப்பில் இடுவது, பொன் உயர்ந்தது என்று காட்டுதற்கேயாம். அதுபோல் உன்னை நெருப்பில் இட்டது, நீ மறுவில்லாத கற்புக்கரசி என்று உலகத்துக்கு உணர்த்தும் பொருட்டேயாம். உனக்கு நிகரான உத்தமக் கற்புள்ளவள் முன்னும் இல்லை; பின்னும் இல்லை. உன்னை வணங்கி உலகம் உய்வு பெறும்" என்று உரைத்தார்.

பொன்னைத் தீயிடைப் பெய்தல்அப் பொன்னுடைத்தூய்மை
தன்னைக் காட்டுதற் கென்பது மனக்கொளல்தகுதி
உன்னைக் காட்டினன் கற்பினுக்கரசி யென்றுலகில்
பின்னைக் காட்டுதற் கரியதென் றேண்ணியிப் பெரியோன்.

இந்த உரையாடல் முடிந்தபின் இலட்சுமணர் சென்று தந்தையாரை அன்புடன் பணிந்தார். இலட்சுமணருடைய தலையில் மயிர் சடையாகத் திரிந்து வனப்பு செய்திருந்தது.

பணிந்த மகனைத் தயரதர் தழுவிக் கொண்டார். இராமர் தன் மனைவியுடன் வனவாசஞ் செய்தார். தந்தையின் கட்டளைக்காகக் காடு போந்தார். இலட்சுமணர் இளம் பத்தினியாகிய ஊர்மிளையையுந் துறந்து, சுகபோகங்களை மறந்து 14 ஆண்டுகள் உண்ணுமலும், உறங்காமலும், நிலத்தில் இருக்காமலும் தன் தமையனுக்குத் திருத்தொண்டு புரிந்த அருமையைப் பார்க்கின்ருர் தயரதர். அந்தத் திருத்தொண்டு மன்னவனுடைய உள்ளத்தை உருக்கியது. அவருடைய கண்களிலிருந்து தாரைதாரையாக நீர்பெருகி வந்து இலட்சுமணருடைய சடையில் உள்ள அழுக்கைக் கழுவி நிலத்தில் ஓடியது.

முன்னே இராமருடைய மார்பாகிய காந்தமணி தயரதருடைய மார்பில் இருந்த கூர்அம்பை மட்டும் எடுத்தது. அம்பால் ஏற்பட்ட புண் ஆறவில்லை. இப்போது இலட்சுமணருடைய மார்பு அப்புண்ணை ஆற்றிவிட்டதாம். இதனைப் புண் நீங்கப் பெற்ற தசரதரே கூறுகின்றார்.

"என் அருமந்த மகனே! உன்னுடைய தியாகம் ஒப்பற்றது. நீ செய்த தியாகம் ஒருவரும் உலகில் செய்ததில்லை. உலகில் உண்ணு விரதம் இருந்தவர்களைக் கண்டிருக்கிறேன். உறங்காவிரதம் இருந்தவர்களை நான் கண்டதேயில்லை. நீ பதினுன்கு யாண்டுகள் உணவையும் உறக்கத்தையும் துறந்தாய்; சிவராத்திரி ஏகாதசியென்ற விரத நாட்களில் ஓரிரவு கண்விழிப்பதற்கு மக்கள் படுகின்ற பாடு அநந்தம். நீ சுகபோகங்கள் அனைத்தையும் துறந்து உன் அண்ணனுக்கு அரிய பெரிய தொண்டுகள் புரிந்தாய். நீ தியாகசீலன். ஆதலால் உன் மார்பில் ஏதோ ஒரு சஞ்சீவி மருந்திருக்கின்றதுபோலும். உனது அழகிய மார்பு என் மார்பில் பட்டவுடனே என் நெஞ்சில் நிறைந்த புண் இருந்த இடம் தெரியாமல் ஆறி மறைந்துவிட்டது. ஆ! ஆ! இது என்ன அற்புதம். புண் இருந்த தழும்புகூடத்தெரியவில்லை. உன் மார்பு ஒரு சஞ்சீவி மருந்து போலும். உன் புகழ் வாழி. உலகில் உள்ள தம்பியர்கள் உன்னைப்போல் ஒழுகுவார்களாக" என்று கூறினுர்.

கண்ணில் நீர்ப்பெருந் தாரைமற் றவன்சடைக்கற்றை
*மண்ணும் நீத்தமொத் திழிதரத் தமீஇநின்று மைந்த!
எண்ணில் நீக்கரும் பிறவியும் என்நெஞ்சில் நிறைந்த
புண்ணும் நீக்கினை ஐயனைத் தொடர்ந்துடன் போந்தாய்.

தயரதர் உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகி இவ்வண்ணம் கூறினுர்.

எனவே இராமர் காந்தமாமணியாக விளங்கினுர்!

---

*மண்ணுதல்—கழுவுதல்.

உ

முருகா

கந்தர் துதி வெண்பா

(அம்பை மீ. சொக்கலிங்கம் பிள்ளை)

வையகமும் வானகமும் வாழ்த்தி வணங்குமொரு
தெய்வக் குமராநின் சேவடியைப் போற்றியான்
கந்தா முருகா கடம்பா கதிர்வேலா
செந்தூரா என்பேன் தினம். 1

கண்கண்ட தெய்வமெனக் கந்தா உனைப்போற்றி
எண்ணிவரும் மாந்தரில் யானும் ஒருவனப்பா
திண்கொண்ட சூரனைச் சேவலும் மஞ்ஞையுமாய்
மண்கண்ட போதே மகிழ்ந்து. 2

திருப்பரங் குன்றினுறை தேவாதி தேவா
திருமருவும் மால்மருகா தேவிஉமை பாலா
திருமணம் செய்துமகிழ் தேவயானை நாதா
திருவருளே உந்தன் செயல். 3

நாமகளின் நாயகன் நான்முகனும் தானறியா
ஓமெனும் மந்திரத்தின் உட்பொருளைத் தந்தையிடம்
கூறி மகிழ்ந்த குமரா குருபராநின்
ஆறுமுகம் காட்டி அருள். 4

உம்பரும் போற்றும் ஒரு முனிவன் என்றுரைக்கும்
கும்பமுனி உன்னைக் குருவாகக் கொண்டதுபோல்
கல்லாத புல்லன் கருத்தில் உனைக்கொண்டேன்
எல்லாம் அருளவல்லாய் என்று. 5

நம்பி உனைத்துதித்த நக்கீர னோடுபலர்
வெம்பி மடியாமல் வீழ்த்தினாய் பூதத்தை
குன்றுதோ றாடும் குகாநின் அடைக்கலம்
என்றுழுவார்க் குண்டோ இடர். 6

ஔவையின் வாயால் அரும்பாடல் கேட்கநீ
நவ்வல் மரமேறி நற்கனிகள் சிந்திணையே
கற்றுரை நாடிக் கருணைபொழி கந்தாநின்
நற்றுளைப் பற்றினேன் நான். 7

எந்தப்பா ஆயினும் யான்பாடு வேனென்பர்
சந்தப்பா பாடுமெனில் சற்றே தயங்கிடுவர்
அந்தப்பா பாடி அருணகிரி போற்றிய
கந்தப்பா பாரப்பா கண். 8

ஆமைபோல் ஐந்தடக்கி ஆர்வமொடு நின்னடைந்த
ஊமைக் குமர குருபரனை உன் அருளால்
பாடவைத்த செந்தூரா பாவியான் நின்னருளை
நாடவைத்துச் செய்வாய் நலம். 9

துன்மார்க்க மேசென்று துன்புறும் மாந்தர்க்குச்
சன்மார்க்கம் இன்னதென்று தான்உணர்த்தும்
ராமலிங்கம்
சொன்மார்க்கம் கேட்டுத் துதித்துனைப் பாடுவதே
என்மார்க்க மாக்கொண்டேன் யான். 10

பொல்லா வினையெதுவும் போக்கி அருள்செய்ய
வல்லான் முருகனென வையத்து நல்லார்
பலர்கூறக் கேட்டுநின் பாதமலர் போற்றும்
சிலரோடு கொள்ளெனைச் சேர்த்து. 11

பூமாலை கொண்டுனைப் போற்றித் தொழுவார்போல்
பாமாலை பாடிநின் பாதமலர் போற்றுகிறேன்
வாடாதிம் மாலையென்றும் வள்ளிமண வாளாநீ
கோடாதே ஏற்றுக் கொளின். 12

—o—

உ

ஓம் குஹாய நம:



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 37

பரிதாபி ஆண்டு

★

(திருப்புகழ்த் தொண்டன்)
கிருபானந்தவாரி

★

திருப்புகழமிர்தம் காரியாலயம்
89, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை :: சென்னை-2.

1973

திருப்புகழமிர்தம்

பொருளடக்கம்

திருப்புகழ்

(பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரையுடன்)

சிதம்பரம்

கற்பு—சிறுகதைகள்

மகாபாரதம்

அநுசாஸன பர்வம்

பிற கட்டுரைகள்

முருகா

திருப்புகழமிர்தம் காரியாலயம்

89, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

எமது வெளியீடுகள்

1.	திருப்புகழ் (முழுவதும்) மூலம் மட்டும்	(அச்சில்)
2.	கந்தரலங்காரம் (விரிவுரையுடன்)	ரூ. 3-50
3.	திருப்புகழ்த் திரட்டு	ரூ. 1-50
4.	திருப்புகழ் விரிவுரை—முதல் தொகுதி (விநாயகர் பாடல்களும், (முதற்படைவீடு திருப்பரங்குன்றப் பாடல்களும்)	ரூ. 2-50
5.	திருப்புகழ் விரியுரை—இரண்டாம் தொகுதி (இரண்டாம் படைவீடு=திருச்செந்தூர்)	ரூ. 5-00
6.	திருப்புகழ் விரிவுரை மூன்ருவது படைவீடு பழநி	(அச்சில்)
7.	திருப்புகழ் விரிவுரை—நான்காம் தொகுதி (நான்காவது படைவீடு—சுவாமிமலை)	(அச்சில்)
8.	திருப்புகழ் விரிவுரை—ஐந்தாம் தொகுதி (குன்றுதோருடல் முதற்பாகம்)	(அச்சில்)
9.	திருப்புகழ் விரிவுரை—ஆறும் தொகுதி (குன்றுதோருடல் இரண்டாவது பகுதியும், பழமுதிர்சோலையும்)	ரூ. 5-00
10.	திருப்புகழ் விரிவுரை—ஏழாவது தொகுதி, பஞ்சபூதத் தலங்கள்—1. காஞ்சிபுரம், திருவானைக்கா.	ரூ. 5-00
11.	திருப்புகழ் விரிவுரை—எட்டாவது தொகுதி திருவருணை—திருக்காளத்தி	ரூ. 6-00
12.	மகாபாரதம், வியாசபாரதச் சுருக்கம் (வசனம்) வில்லிபுத்தூரார் பாடல்களுடன் கூடியது	ரூ. 6-00
13.	கந்தரநுபூதி (உரையுடன்)	(அச்சில்)
14.	கட்டுரைக்கனிகள்	ரூ. 3-50
15.	திருவகுப்பு (மூலம் மட்டும்) கந்தரந்தாதி (உரையுடன்)	ரூ. 1-50
16.	அறிவுரையமுது (கட்டுரைகள்)	ரூ. 0-50
17.	திருவாசகத்தேன் (,,)	ரூ. 0-50
18.	சிந்தனைத்தேன் (,,)	ரூ. 0-50
19.	மணிமொழிகள் (,,)	ரூ. 0-50
20.	பன்னிரு திருமுறைத் திரட்டு	ரூ. 0-50
21.	அநசூயை (வரலாறுகள்)	ரூ. 1-00
22.	விநாயகர்	ரூ. 0-50
23.	முருகன்	ரூ. 1-00

(எல்லாவற்றுக்கும் தபாற்செலவு வேறு)